தமிழ்நாடு
சட்ட மன்றப் பேரவை நடவடிக்கைகள்
செயலகக் குறிப்பு

தொகுதி - 31 எண் - 1

5 [illegible] - 1993

வெளியீடு 12-6-1993 Issued 12-6-1993

429/93

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை, பிப்ரவரி 5, 1993 - தொகுதி 31 எண். 1
Friday, the 5th February 1993 - Volume 31 No. 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009
Legislative Assembly Secretariat, Fort St. George
Madras-600 009

விலை ரூ. 3.00] [Price Rs. 3-00

## உள்ளடக்கம்.

## 5—2 —1993


| | பக்கங்கள். |
|---|---|
| தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் | i —iv |
| Personnel of the Government of Tamil Nadu | v—vii |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் | viii—x |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி) .. .. | xi—xx |
| 1. இரங்கல் குறிப்புகள்— | |
| முன்னாள் உறுப்பினர்கள் மறைவு குறித்து .. | 1—2 |
| 2. இரங்கல் தீர்மானங்கள்— | |
| முன்னாள் அமைச்சர் திருமதி ஜோதி வெங்கடாசலம் மறைவு மற்றும் உறுப்பினர் திரு. என். ஜி. வேணுகோபால் மறைவு குறித்து .. | 3—16 |
| 3. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்— .. | 17—28 |

164980



## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்.

ஆளுநர் — திரு. பீஷ்ம நாராயண் சிங்.

### அமைச்சரவையின் உறுப்பினர்கள் :

1. முதலமைச்சர் .. மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா :

பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர், இந்திய காவல் பணியாளர் மற்றும் அனைத்திந்தியப் பணியாளர்கள், மாவட்ட வருவாய் அதிகாரிகள், காவல், இலஞ்ச ஒழிப்பு, தொழில்கள், மதுவிலக்கு மற்றும் ஆயத்துறை, சர்க்கரைப் பாகு கழிவு, சிறுபான்மையினர் நலம், இந்து சமய அறநிலையத் துறை, செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், திரைப்படச் சட்டம், சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம், சுரங்கம் மற்றும் கனிம வளம், மின்னணுவியல் மற்றும் அச்சுக் காகிதக் கட்டுப்பாடு.

2. நிதி அமைச்சர் .. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :

நிதி, திட்டம், தேர்தல்கள், சட்டமன்றம்.

3. சட்ட அமைச்சர் .. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :

சட்டம், நீதிமன்றங்கள், சிறைகள், எடைகள்-அளவைகள் பற்றி சட்டம் இயற்றுதல், கடன் நிவாரணம் (கடன் வழங்கல், சீட்டு நிதி இவை பற்றிய சட்டம் இயற்றுதல் உட்பட), கம்பெனிகள் பதிவு.

4. வருவாய்த்துறை அமைச்சர். — மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :

வருவாய், மாவட்ட வருவாய்த் துறைப் பணியாளர்கள், மாவட்டத் துணை ஆட்சியாளர்கள், ஆவணப் பதிவுத் துறை, முத்திரைச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை, அரசு அச்சகம், பூமிதானம் மற்றும் கிராமதானம், பயண இசைவுச் சீட்டு, வணிக வரிகள்.

5. கல்வி அமைச்சர் .. — மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் :

கல்வி, தொழில்நுட்பக் கல்வி, அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், விளையாட்டு மற்றும் இளைஞர் நலம், தொல்பொருளியல், தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாடு.

6. மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர். — மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி, குடும்ப நலம், சுற்றுச் சூழல் மாசு கட்டுப்படுத்தல்.

7. போக்குவரத்துத் துறை அமைச்சர். — மாண்புமிகு திரு. கே. செங்கோட்டையன் :

போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், துறைமுகங்கள், வனங்கள் மற்றும் சின்கோனா.

8. கைத்தறி மற்றும் நெசவாலைகள் துறை அமைச்சர். — மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் :

கைத்தறி மற்றும் நெசவாலைகள்.

9. பொதுப்பணித்துறை அமைச்சர். — மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் :

பொதுப் பணிகள், பாசனம் (சிறு பாசனம் உட்பட) நெடுஞ்சாலைகள், மின்சாரம், மரபுசாரா எரிசக்தி வளர்ச்சி, இரும்பு மற்றும் எஃகுக் கட்டுப்பாடு.



10. உள்ளாட்சித் துறை அமைச்சர். — மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு :

நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், கிராமப்புறக் கடன் சம்பந்தப்பட்டவை, நகர்ப்புற மற்றும் கிராமப்புற குடிநீர் வழங்கல்.

11. உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர். — மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் :

உணவு, கூட்டுறவு, நுகர்பொருள் வழங்கல், விலைவாசிக் கட்டுப்பாடு, புள்ளிவிவரங்கள், பால், பால் பெருக்குத் திட்டம்.

12. தொழிலாளர் நலத் துறை அமைச்சர். — மாண்புமிகு திரு. சே. ரகுபதி :

தொழிலாளர், வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி, நகர்ப்புற மற்றும் கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டங்கள், மக்கள் தொகைக் கணக்கு.

13. வேளாண்மைத் துறை அமைச்சர். — மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் :

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, சர்க்கரை வரி மற்றும் சர்க்கரை வளர்ச்சி மற்றும் கால்நடைப் பராமரிப்பு.

14. வீட்டு வசதி-நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர். — மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி :

வீட்டு வசதி, குடிசை மாற்றுத் திட்டம், ஊரக வீட்டு வசதி வளர்ச்சி, இடவசதிக் கட்டுப்பாடு, நகர அமைப்பு, நகர்ப்புற வளர்ச்சி சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

| | |
|---|---|
| 15. சமூக நலத் துறை அமைச்சர். | **மாண்புமிகு திருமதி இரா. இந்திர குமாரி :** சமூக நலம் (மகளிர் மற்றும் குழந்தைகள் நலம் உட்பட), சத்துணவு, பிச்சைக்காரர் விடுதிகள், அனாதை விடுதிகள், சீர்திருத்த நிர்வாகம். |
| 16. ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர். | **மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் :** ஆதி திராவிடர் நலம், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் பிணைத் தொழிலாளர், முன்னாள் இராணுவத்தினர் நலன். |
| 17. பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர். | **மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் :** பிற்பட்டோர் நலம், மிகப் பிற்பட்டோர் நலம் மற்றும் சீர் மரபினர், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர் மற்றும் மீனளம். |
| 18. ஊரகத் தொழில் துறை அமைச்சர். | **மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் :** சிறு தொழில்கள், ஊரகத் தொழில்கள் (குடிசைத் தொழில்கள் உட்பட), கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியம், வக்ஃப். |



# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR OF TAMIL NADU

## THIRU BHISHMA NARAIN SINGH

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

| | |
|---|---|
| 1 Chief minister .. | **THE HON. DR. J. JAYALALITHA ;** Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service and other All India Services, District Revenue Officers, Police, Prevention of Corruption, Industries, Prohibition and Excise, Molasses, Minorities, Hindu Religious and Charitable Endowments, Information and Publicity, Film Technology, Cinematography Act, Tourism and Tourism Development Corporation, Mines and Minerals, Electronics and Newsprint Control. |
| 2 Minister for Finance .. | **THE HON. DR. V.R. NEDUNCHEZHIAN;** Finance, Planning, Elections and Legislature. |
| 3 Minister for Law .. | **THE HON. THIRU K.A. KRISHNASAMY ;** Law, Courts, Prisons, Legislation on Weights and Measures Debt Relief including Legislation on Money-lending, chits and Registration of Companies. |
| 4 Minister for Revenue .. | **THE HON. THIRU S.D. SOMASUNDARAM ;** Revenue, District Revenue Establishment, Deputy Collectors Registration, Stamp, Act Stationery and Printing, Government Press, Bhoodan and Gramdan Passports and Commercial Taxes. |

5 Minister for Education .. THE HON. DR. C. ARANGANAYAGAM ; Education, Technical Education, Science and Techonology Sports and Youth Welfare and Archaeology, Tamil Development and Tamil Culture.

6 Minister for Health .. THE HON. THIRU S. MUTHUSAMY ; Health, Medical Education, Family Welfare and Environmental Pollution Control.

7 Minister for Transport .. THE HON. THIRU K.A. SENGOTTAYAN ; Transport, Nationalised Transport, Motor Vehicles Act, Ports, Forests, and Cinchona.

8 Minister for Handlooms and Textiles THE HON. THIRU E. MADHUSUDHANAN ; Handlooms and Textiles.

9 Minister for Public Works .. THE HON. THIRU S. KANNAPPAN ; Public Works, Irrigation including Minor Irrigation, Highways, Electricity, Non-Conventional Energy Development and Iron and Steel Control.

10 Minister for Local Administration .. THE HON. THIRU ALAGU THIRUNAVUKKARASU: Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness and Urban and Rural Water Supply.

11 Minister for Food and Co-operation .. THE HON. THIRU G. VISWANATHAN; Food, Co-operation, Civil Supplies, Price Control, Statistics and Dairy Development.

12 Minister for Labour .. THE HON. THIRU S. REGUPATHY ; Labour, Employment and Training, Urban and Rural Employment Programmes and Census.



13 Minister for Agriculture .. THE HON. THIRU KU. PA. KRISHNAN : Agriculture, Agricultural Engineering, Agro Service, Co-operatives, Horticulture, Sugarcane cess and Sugarcane Development and Animal Husbandry.

14 Minister for Housing and Urban Development. .. THE HON. THIRU T. M. SELVAGANA PATHI Housing Slum Clearance, Rural Housing Development, Accommodation Control, Town Planning, Urban Development and Madras Metropolitan Development Authority.

15 Minister for Social Welfare .. THE HON. THIRUMATHI R. INDIRA KUMARI : Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meals, Beggar Homes, Orphanages and Correctional Administration.

16 Minister for Adi-Dravidar Welfare .. THE HON. THIRU M. ANANDAN : Adi-Dravidar Welfare, Hill Tribes Bonded Labour and Welfare of Ex-Servicemen.

17 Minister for Backward Classes and Fisheries THE HON. THIRU D. JAYAKUMAR : Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indians Overseas Refugees and Evacuees and Fisheries.

18 Minister for Rural Industries ; THE HON. THIRU S. NAGOORMEERAN : Small Scale Industries, Rural Industries including Cottage Industries, Khadi and Village Industries Board and Wakf.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

### பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. இரா. முத்தையா

### பேரவைத் துணைத் தலைவர்

பேராசிரியர் க. பொன்னுசாமி

### மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

1. திரு. ம. சின்னசாமி
2. திரு. க. அர்ச்சுனன்
3. திரு. கி. தருமலிங்கம்
4. திரு. ஆர். சிங்காரம்
5. திரு. ஜி. பழனிசாமி
6. திரு. செ. கு. தமிழரசன்

### செயலாளர்.

திரு. செ. சு. ஜானகிராமன்

* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களால் 1993 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 8 ஆம் நாள் அவையில் அறிவிக்கப் பெற்றது

## பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

| | | |
|---|---|---|
| 1. | திரு. கா. செ. சுந்தரராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | இணைச் செயலாளர் |
| 2. | திரு. தா. ஜேக்கப் ஆர்த்தர், பி.ஏ., பி.எல்., டி.பி. மற்றும் பி.ஏ. | இணைச் செயலாளர் |
| 3. | திரு. டி. சாலமன் ஜெயபால், பி.எஸ்சி., பி.எல். | இணைச் செயலாளர் |
| 4. | திரு. பா. கி. இராஜேந்திரன், பி.ஏ. | துணைச் செயலாளர் |
| 5. | திரு. வெ. இராசாராமன், பி.ஏ., பி.எல். | துணைச் செயலாளர் |
| 6. | திரு. பெ. இராசமாணிக்கம், பி.ஏ., பி.எல். | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 7. | திரு. கோ. சண்முகநாதன், பி.காம். | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 8. | திரு. ப. சீ. வெங்கடராமன், பி.காம். | குழு அலுவலர். |
| 9. | திருமதி முனிர் உனிசா, பி.எஸ்சி., பி.ஜி.எல். | குழு அலுவலர் |
| 10. | திரு. கா. ப. இராஜன், டி.ஆர்.எஸ். | சார்புச் செயலாளர் |
| 11. | திருமதி பானுமதி ஆனந்தராஜன், பி.எஸ்சி., பி.ஜி.எல். | சார்புச் செயலாளர் |
| 12. | திரு. கி. சாயிநர்தன், பி.ஏ., பி.ஜி.எல். | சார்புச் செயலாளர் |
| 13. | திருமதி வீ. நா. உமா, பி.ஏ. .. | சார்புச் செயலாளர் |
| 14. | திருமதி பவானி சுப்பையா, பி.ஏ., பி.ஜி.எல். | சார்புச் செயலாளர் |
| 15. | திரு. சா. கணேசன், பி.ஏ., பி.ஜி.எல். | சார்புச் செயலாளர் |
| 16. | திரு. சே. க. இராஜசேகரன், எம்.ஏ., பி.எல். | சார்புச் செயலாளர் |

| | | |
|---|---|---|
| 17. | திரு. ஜெ. அப்துல் சத்தார், பி.ஏ., பி.எல். | சார்புச் செயலாளர் |
| 18. | திரு. ந. முடிகோபதி, எம்.ஏ. | சார்புச் செயலாளர் |
| 19. | திரு. க. சம்பத்ராஜன், பி.ஏ. | சார்புச் செயலாளர் |
| 20. | திரு. எம். ஜோபாய், பி.காம். | சார்புச் செயலாளர் |
| 21. | திரு. தி. திருமாவளவன், பி.எஸ்சி., பி.எல். | சார்புச் செயலாளர் |
| 22. | திரு. கோ. வெங்கடராமன், | பேரவைத் தலைவரின் தனிச் செயலர். |
| 23. | திரு. செ. ஏ. துரைபாண்டியன், பி.ஏ. | தலைமை நிருபர் |
| 24. | திரு. துரை சுந்தரராஜுலு, எம்.ஏ. | தலைமை நிருபர் |
| 25. | திரு. செ. சந்திரகுமார், எம்.ஏ. | தலைமை நிருபர் |
| 26. | திரு. இரா. வெங்கடேசன், எம்.ஏ., எல்.எல்.பி. | தலைமை நிருபர் |



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

## உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி).

### பெயர்களும் தொகுதிகளும்

| | | |
|---|---|---|
| 1. | அண்ணாமலை, திரு. எஸ். .. | ஆலந்தூர். |
| 2. | அபரஞ்சி, திரு. பெ. .. | அரூர் (செ.வ.) |
| 3. | அபுல்ஹசன், திரு. எம்.எம்.எஸ். | மயிலாடுதுறை |
| 4. | அப்பு நடேசன், திரு. இரா. .. | திருவட்டாறு |
| 5. | அமர்நாத், திரு. ஓ. எஸ். .. | மதுரை கிழக்கு |
| 6. | அம்மமுத்து பிள்ளை, டாக்டர் மு. | கன்னியாகுமரி |
| 7. | அரங்கநாதன், திரு. ஆர். டி. .. | விருத்தாசலம் |
| 8. | அரங்கநாயகம், டாக்டர் செ. | தொண்டாமுத்தூர் |
| 9. | அர்ச்சுனன், திரு. க. .. .. | வீரபாண்டி |
| 0. | அழகிரி, திரு. ச. .. .. | சிதம்பரம் |
| 1. | அழகு திருநாவுக்கரசு, திரு. .. | ஒரத்தநாடு |
| 2. | அறிவழகன், திரு. ஆ. .. | கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |
| 3. | அன்பழகன், திரு. எஸ். .. | நாமக்கல் (செ.வ.) |
| 4. | ஆசைமணி, திரு. எஸ். .. | குத்தாலம் |
| 5. | ஆண்டி அம்பலம், திரு. எம். .. | நத்தம் |
| 6. | ஆண்டித் தேவர், திரு. எஸ். .. | திருப்பரங்குன்றம் |
| 7. | ஆரோக்கியசாமி, டாக்டர் ச. .. | திருச்சிராப்பள்ளி-1. |
| 8. | ஆறுமுகம், திரு. செ. .. | வானூர் (செ.வ.) |
| 9. | ஆனந்தன், திரு. எம். .. | உளுந்தூர்பேட்டை (செ.வ.) |
| 0. | இந்திரகுமாரி, திருமதி இரா. .. | நாட்ராம்பள்ளி |
| 1. | இராசமாணிக்கம், திரு. க.வெ.வீ. | மேலூர் |

22. இராசாராமன், திரு. சோ. .. பாபநாசம்
23. இராசாராம், திரு. க. .. பனமரத்துப்பட்டி
24. இராதாகிருஷ்ணன், திரு. த. க. திருமங்கலம்
25. இராமகிருஷ்ணன், டாக்டர் இ. அச்சரப்பாக்கம் (செ.வ.)
26. இராமசாமி அம்பலம், திரு. கே. ஆர். திருவாடனை
27. இராமசுவாமி, திரு. சி. .. சங்கராபுரம்
28. இராமச்சந்திரன், திரு. ஒ. ஆர். கம்பம்
29. இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். சாத்தூர்
30. இராமச்சந்திரன், திரு. ச. .. பண்ருட்டி
31. இராமச்சந்திரன், திரு. மா. சா. மா. இளையாங்குடி
32. இராமதாஸ், திரு. எஸ். எஸ். ஆர். செஞ்சி
33. இராமநாதன், திரு. இராம. .. கும்பகோணம்
34. இராம, வீரப்பன், திரு. .. காங்கேயம்
35. இராஜமன்னார், திரு. சு. சே. .. ஒட்டப்பிடாரம் (செ.வ.)
36. இராஜன்பாபு என்கிற தணிகைபாபு, திரு. கி. .. திருத்தணி.
37. இராஜேந்திரன், திரு. பி.வி. .. வேதாரண்யம்
38. இலதா பிரியகுமார், திருமதி .. அரக்கோணம் (செ.வ.)
39. இளம்வழுதி, திரு. .. .. எழும்பூர் (செ.வ.)
40. ஈஸ்வரமூர்த்தி, திரு. பி. .. தாராபுரம் (செ.வ.)
41. ஈஸ்வரன், திரு. ஆர். .. வாசுதேவநல்லூர் (செ.வ.)
42. ஏகாம்பர ரெட்டி, திரு. எ. .. பள்ளிப்பட்டு
43. கண்ணப்பன், திரு. எஸ். .. திருப்பத்தூர்
44. கண்ணன், திரு. வே. .. திருவண்ணாமலை



45. கந்தசாமி, திரு. கே. .. தலைவாசல் (செ.வ.)
46. கருப்புசாமி, டாக்டர் எம். .. குன்னூர் (செ.வ.)
47. கலியபெருமாள், திரு. ப. .. திருவையாறு
48. கலைச்செல்வி, திருமதி கே. எம். காட்பாடி
49. கவிநிலவு தர்மராஜ், திருமதி மொடக்குறிச்சி
50. கற்பகம் இளங்கோ, திருமதி .. காரைக்குடி
51. கனகவல்லி, திருமதி என். .. விளாத்திகுளம்
52. காஞ்சி பன்னீர் செல்வம், திரு உத்திரமேரூர்
53. காந்திராஜன், திரு. ச. .. வேடசந்தூர்
54. காளன், திரு. கோ. .. வில்லிவாக்கம்
55. காளிராஜன், டாக்டர் மு. .. சமயநல்லூர் (செ.வ.)
56. கிருஷ்ணசாமி, திரு. கே. ஏ. ... ஆயிரம்விளக்கு
57. கிருஷ்ணன், திரு. எஸ். எம். தாம்பரம்
58. கிருஷ்ணன், திரு. கு. ப. ... ஸ்ரீரங்கம்
59. கிருஷ்ணன், திரு. சி. .. ஓமலூர்
60. குப்பன், திரு. க. .. திருவொற்றியூர்
61. குமரி அனந்தன், திரு. ... சாத்தான்குளம்
62. குமாரதாஸ், டாக்டர் தே. கிள்ளியூர்
63. குழந்தைவேலு, திரு. சி. ... குளத்தூர் (செ.வ.)
64. கோடிமாரி, திரு. ஆர். .. நாகப்பட்டினம்
65. கோபாலகிருஷ்ணன், திரு. வே. சங்கரநயினார் கோவில் (செ.வ.)
66. கோபால், டாக்டர் க. ... நன்னிலம் (செ.வ.)
67. கோவிந்தராசு, திரு. மா. ... ரிஷிவந்தியம்
68. சக்குபாய், திருமதி ரா. ... கும்மிடிபூண்டி

| | | | |
|---|---|---|---|
| 69. | சக்குபாய் தேவராஜ், திருமதி, டி. | | திருவள்ளூர் |
| 70. | சஞ்சய் ராமசாமி, திரு. | .. | விருதுநகர் |
| 71. | சண்முகநாதன், திரு. எஸ். | .. | ஆலங்குடி |
| 72. | சண்முகம், திரு. எஸ். வி. | ... | மதுரை மேற்கு |
| 73. | சத்தியமூர்த்தி, திரு. வ. | ... | கடலாடி |
| 74. | சந்திரசேகர், திரு. வி. பி. | | பொள்ளாச்சி |
| 75. | சம்பத், திரு. எ. | .. | வாணியம்பாடி |
| 76. | சரஸ்வதி, திருமதி, அ. தி. | | சத்தியமங்கலம் |
| 77. | சரஸ்வதி, திருமதி ப. | .. | கபிலர்மலை |
| 78. | சரோஜா, டாக்டர் வெ. | .. | சங்கரி (செ.வ.) |
| 79. | சாத்தையா, திரு. தி. | .. | இராஜபாளையம் (செ.வ.) |
| 80. | சாவித்திரி அம்மாள், திருமதி ஆர். | ... | முகையூர் |
| 81. | சிங்காரம், திரு. ஆர். | .. | பேராவூரணி |
| 82. | சிங்காரம், திரு. கே. | .. | மொரப்பூர் |
| 83. | சிங்கை கோவிந்தராசு, திரு. | .. | சிங்காநல்லூர் |
| 84. | சியாமளா, திருமதி ரெ. | .. | கோவில்பட்டி |
| 85. | சிவசுப்பிரமணியன், திரு. கு. | .. | குறிஞ்சிப்பாடி |
| 86. | சிவபதி, திரு. என். ஆர். | .. | தொட்டியம் |
| 87. | சின்னசாமி, திரு. கா. | .. | சேந்தமங்கலம் (ம.ப.) |
| 88. | சின்னசாமி, திரு. ம. | .. | கரூர் |
| 89. | சின்னசாமி, திரு. வி.கே. | .. | பவானிசாகர் |
| 90. | சின்னப்பன், திரு. கே. கே. | .. | ஜெயங்கொண்டம் |
| 91. | சீனியம்மாள், டாக்டர் மு. | ... | அவினாசி (செ.வ.) |



| | | | |
|---|---|---|---|
| 92. | சீனிவாசன், திரு. ஆ.கு. | ... | பெரணமல்லூர் |
| 93. | சீனிவாசன், திரு. கு. | .. | மன்னார்குடி |
| 94. | சுதர்சனம், திரு. டி. | ... | பூந்தமல்லி |
| 95. | சுந்தரசாமி, திரு. எம். | ... | கலசப்பாக்கம் |
| 96. | சுந்தரதாஸ், திரு. மா. | ... | விளவன்கோடு |
| 97. | சுந்தரம், திரு. எம். கே. | ... | தண்டராம்பட்டு |
| 98. | சுந்தரராஜ், டாக்டர் எஸ். | .. | பரமக்குடி (செ.வ.) |
| 99. | சுந்தரவேல், திரு. ஏ. கே. சி. | .. | திருப்பத்தூர் |
| 100. | சுந்தராம்பாள், திருமதி செ. | .. | மேட்டூர் |
| 101. | சுப்பிரமணியம், திரு. வ. மு. | .. | மானாமதுரை (செ.வ.) |
| 102. | சுப்பிரமணியன், திரு. வி. என். | | பெருந்துறை |
| 103. | சுப்பிரமணியன், திரு. வீ. | .. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 104. | சுப்புரத்தினம், திரு. ஆ. | ... | பழனி (செ.வ.) |
| 105. | சுலோசனா, செல்வி எல். | ... | மேட்டுப்பாளையம் |
| 106. | சுவாமிநாதன், திரு. சி. | ... | புதுக்கோட்டை |
| 107. | செங்கோட்டையன், திரு. கே. ஏ. | .. | கோபிசெட்டிபாளையம் |
| 108. | செல்லக்குமார், டாக்டர் அ. | ... | அண்ணா நகர் |
| 109. | செல்லசாமி, திரு. ஏ. டி. | ... | ஒட்டன்சத்திரம் |
| 110. | செல்லதுரை, திரு. ஆ. | ... | திருச்செந்தூர் |
| 111. | செல்வகணபதி, திரு. டி. எம். | ... | திருச்செங்கோடு |
| 112. | செல்வராசன், திரு. அ. | ... | துறைமுகம் |
| 113. | செல்வராஜ், திரு. கே. | ... | கோயம்புத்தூர் மேற்கு |
| 114. | செழியன், திரு. தா. | ... | பெரம்பலூர் (செ.வ.) |
| 115. | சேகர், டாக்டர் எம். பி. | ... | பெரம்பூர் (செ.வ). |

116. சேகர், திரு. எம். ஜி. ... பாலக்கோடு

117. சொக்கலிங்கம், திரு. பி. ... மதுராந்தகம்

118. சோமசுந்தரம், திரு. எஸ். டி. .. தஞ்சாவூர்

119. ஞானசேகரன், திரு. சி. ... வேலூர்

120. டேனியல்ராஜ், திரு. எஸ். ... ஸ்ரீவைகுண்டம்

121. தங்கமுத்து, திரு. கு. .. திருவோணம்

122. தங்கராஜ், திரு. ஆர். ... ஆண்டிமடம்

123. தங்கவேல், திரு. எம். ... முசிறி

124. தண்டாயுதபாணி திரு. வி. .. குடியாத்தம்

125. தமிழரசன், திரு. செ. கு. ... வந்தவாசி (செ.வ.)

126. தமிழரசு, திரு. வெ. ... ஆத்தூர்

127. தம்புசாமி, திரு. வே. ... திருவாரூர் (செ.வ.)

128. தருமலிங்கம், திரு. கி. ... அணைக்கட்டு

129. தர்மலிங்கம், திரு. பே. ... பாளையங்கோட்டை

130. தவசி, திரு. கே. ... ஆண்டிப்பட்டி

131. தனபால், திரு. ம. ... திருப்போரூர் (செ.வ.)

132. தாமரைக்கனி, திரு. இரா. ... ஸ்ரீவில்லிபுத்தூர்

133. தாமோதரன், திரு. சி. ... நெல்லிக்குப்பம்

134. திருநாவுக்கரசு, திரு. எஸ். ... அறந்தாங்கி

135. துரை, திரு. எஸ். எம். ... ஆத்தூர்

136. துரைமுருகன், திரு. கே. எஸ்... பல்லடம்

137. துரை ராமசாமி, திரு. ... வெள்ளக்கோவில்

138. தெய்வநாயகம், திரு. எ. ... மதுரை மத்தி

139. தென்னவன், திரு. மு. ... இராமநாதபுரம்



140. தேவராஜ், திரு. அ. .. செய்யாறு

141. தேனி பன்னீர்செல்வம், திரு. .. போடிநாயக்கனூர்

142. நடேசன், திரு. மு. ... சேலம்-2

143. நடேசன் பால்ராஜ், திரு. வெ. நாங்குநேரி

144. நாகூர் மீரான், திரு. எஸ். .. கடையநல்லூர்

145. நிர்மலா, திருமதி பி. .. திண்டுக்கல்

146. நெடுஞ்செழியன், டாக்டர் இரா. தேனி

147. பஞ்சவர்ணம், திருமதி கே. .. வலங்கைமான் (செ.வ.)

148. பட்டாபிராமன், திரு. கா. ப. காஞ்சிபுரம்

149. பரந்தாமன், டாக்டர் ஜெ. .. பேரணாம்பட்டு (செ.வ.)

150. பரமசிவம், திரு. ஆர். பி. .. சின்னசேலம்

151. பரமசிவன், திரு. ஏ. எம். .. சோழவந்தான்

152. பலராமன், திரு. உ. .. பூங்கா நகர்

153. பழனிசாமி, திரு. இரா. .. தாரமங்கலம்

154. பழனிசாமி, திரு. க. .. எடப்பாடி

155. பழனிசாமி, திரு. நா. சா. .. கிணத்துக்கடவு

156. பழனிசாமி, திரு. வெ. .. திருப்பூர்

157. பழனிசாமி, திரு. ஜி. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.)

158. பழனியம்மாள், திருமதி க. .. ராசிபுரம்

159. பன்னீர்செல்வம், திரு. என். .. திருவிடைமருதூர்

160. பன்னீர்செல்வம், திரு. சா. .. திண்டிவனம்

161. பன்னீர்செல்வம், திரு. ஜெ. ... திருநாவலூர்

162. பாண்டியம்மாள், திருமதி இரா... உசிலம்பட்டி

163. பாப்பா சுந்தரம், திரு. அ. ... குளித்தலை

164. பாலகங்காதரன், திரு. ஜெ. .. சிவகாசி

165. பாலகிருஷ்ணன், திரு. சோ. .. முதுகுளத்தூர்

166. பாலசுப்பிரமணியன், திரு. கி. .. பட்டுக்கோட்டை

167. பாலசுப்பிரமணியன், திரு. எஸ். ஆர். .. பொங்கலூர்

168. பாலன், திரு. எம். கே. .. சைதாப்பேட்டை

169. பாலையா, திரு. ஆ. .. குளச்சல்

170. பிட்ரிக்ஸ் டி.சோசா, டாக்டர்.. நியமனம்

171. பீட்டர் அல்போன்ஸ், திரு. எஸ். .. தென்காசி

172. புதுநயினார் ஆதித்தன், திரு... இரா. சேரன்மகாதேவி

173. புரட்சிமணி, திரு. ச. ... மங்களூர் (செ.வ.

174. புருஷோத்தமன், டாக்டர் வெ. பெண்ணாகரம்

175. பூராசாமி, திரு. எம். ... பூம்புகார்

176. பெரியசாமி, திரு. வே. .. அந்தியூர் (செ.வ.)

177. பெரியவீரன், திரு. எம். .. பெரியகுளம்

178. பெருமாள், திரு. செ. .. ஏற்காடு (ம.ப.)

179. பொன்னம்மாள், திருமதி ஏ. எஸ். .. நிலக்கோட்டை (செ.வ.).

180. பொன்னுசாமி, பேராசிரியர் க. .. மருங்காபுரி

181. பொன்னுசாமி, திரு. பெ. .. தருமபுரி

182. பொன்னுவேலு, திரு. ஏ. தா... வரகூர் (செ.வ.)

183. போளூர் வரதன், திரு. .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)

184: மணிமேகலை, டாக்டர் சு. .. அரியலூர்



185. மணிமேகலை, திருமதி வி. ஜி. அருப்புக்கோட்டை.

186. மணிவாசகம், திரு. கே. பி. .. உடுமலைப்பேட்டை.

187. மதுசூதனன், திரு. இ. .. டாக்டர் இராதா கிருஷ்ணன் நகர்.

188. மரியம் உல் ஆசியா, திருமதி கே. அரவக்குறிச்சி.

189. மல்லிகா, செல்வி கோ. .. புவனகிரி.

190. மனோகரன், திரு. கே. ஏ. .. ஓசூர்.

191. மாணிக்கம், திரு. சி. .. ஈரோடு

192. மாலா, டாக்டர் ஜி. ஆர். .. திருச்சிராப்பள்ளி.

193. முத்துசாமி, திரு. சு. .. பவானி.

194. முத்தையா, திரு. இரா. .. சேடப்பட்டி.

195. முருகானந்தம், திரு கே. ஆர். சிவகங்கை.

196. முருகையா பாண்டியன், திரு. ஆர். அம்பாசமுத்திரம்.

197. முனிரத்தினம், திரு. ஏ. எம். சோளிங்கர்.

198. முனிவெங்கடப்பன், திரு. கே. கிருஷ்ணகிரி.

199. முனுசாமி, திரு. கா. பூ. .. காவேரிப்பட்டினம்.

200. முஹமது ஆசிப், திரு. .. திருவல்லிக்கேணி.

201. மூர்த்தி, திரு. து. .. சீர்காழி (செ.வ.).

202. மோசஸ், டாக்டர் எம். .. நாகர்கோவில்.

203. ரகுபதி, திரு. சே. .. திருமயம்.

204. ரங்கநாதன், திரு. ப. .. புரசைவாக்கம்.

205. ரங்கராஜன், திரு. டி. எம். மயிலாப்பூர்.

206. ரத்தினவேல், திரு. த. .. திருவெறும்பூர்.

207. ரமணி நல்லதம்பி, திருமதி .. ராதாபுரம்.

208. ரமேஷ், திரு. வி. பி. ஆர். .. தூத்துக்குடி.

209. ரவிக்குமார், திரு. ஏ. .. பொன்னேரி (செ.வ.).

10. ரவிச்சந்திரன், திரு. வி. .. உப்பிலியாபுரம்(ம.ப.).

211. ராமசுப்பு, திரு. எஸ். எஸ். .. ஆலங்குளம்.
212. ராஜு, திரு. எச். எம். .. உதகமண்டலம்.
213. ராஜு, திரு. கே. ஆர். .. கூடலூர்.
214. ராஜு, திரு. கே. பி. .. பேரூர்.
215. ராஜேந்திரன், திரு. என். ஆர். காட்டுமன்னார் கோவில் (செ.வ.).
216. லட்சுமணன், திரு. வி. கே. கோயம்புத்தூர் கிழக்கு
217. லாரன்ஸ், திரு. கு. .. பத்மநாபபுரம்
218. லோகாம்பாள், திருமதி ஜெ. லால்குடி.
219. வரதராஜன், திரு. செ. து. .. செங்கல்பட்டு.
220. விசுவநாதன், திரு. ஜி. .. ஆற்காடு.
221. வீரபாண்டியன், டாக்டர் பெ. செங்கம் (செ.வ.).
222. வெங்கடராமரெட்டி, திரு. மு. தளி.
223. வெங்கடேசன், திரு. பி. ஆர். எஸ். கடலூர்.
224. வேடியப்பன், திரு. தா. போளூர்.
225. வேலையா, திரு. டி. .. திருநெல்வேலி.
226. ஜனார்தனன், திரு. தே. .. விழுப்புரம்.
227. ஜானகிராமன், திரு. கோ. .. மேல்மலையனூர்.
228. ஜீனத் சர்புதீன், திருமதி .. சேப்பாக்கம்.
229. ஜெயக்குமார், திரு. எஸ். .. தியாகராய நகர்.
230. ஜெயகுமார், திரு. டி. .. ராயபுரம்.
231. ஜெயராமன், திரு. எஸ். ஆர். சேலம்-1.
232. ஜெயலலிதா, டாக்டர் ஜெ. பர்கூர்.
233. ஜெய்சன் ஜேக்கப், டாக்டர் ஆரணி.
234. ஸ்ரீதரன், டாக்டர் அ. .. வால்பாறை (செ.வ.)..
235. (வெற்றிடம்) .. ராணிப்பேட்டை.

பேரவை நடவடிக்கைகளில் பங்கு கொள்ள உரிமை பெற்றவர்.

சுப்பிரமணியன், திரு. கே. .. தலைமை வழக்கறிஞர்

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**1993, பிப்ரவரி 5, வெள்ளிக்கிழமை,**

**தை 23, ஆங்கீரச—திருவள்ளுவர் ஆண்டு 2024.**

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 10-30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''தன்னுயிர் தான்அறப் பெற்றானை ஏனைய
மன்னுயி ரெல்லாம் தொழும்''

தன்னுயிர் தனக்கு மட்டுமே என்ற தன்னலச் செருக்கு நீங்கி வாழ்ந்தோரை மற்ற உயிர்கள் எல்லாம், அவர்கள் பெருமைகளை உணர்ந்து தொழுது வணங்குவர்.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி ( * ) இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

### 1. இரங்கல் குறிப்புகள்.

### முன்னாள் உறுப்பினர்கள் மறைவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இரங்கல் குறிப்புகள். தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினர்களான திருவாளர்கள் எம்.எஸ். இராதாகிருஷ்ணன் அவர்கள் 17-10-1992 ஆம் நாளன்றும், எஸ். அரங்கநாதன் அவர்கள் 11-11-1992-ஆம் நாளன்றும், அ. தியாகராஜ காடுவெட்டியார் அவர்கள் 20-12-1992-ஆம் நாளன்றும், அ. சுப்பு அவர்கள் 22-12-1992-ஆம் நாளன்றும், ஆர். எஸ். ஆறுமுகம் அவர்கள் 3-1-1993-ஆம் நாளன்றும் மற்றும் டி. இராசரத்தினம் அவர்கள் 11-1-1993-ஆம் நாளன்றும் மறைந்ததை குறித்து, இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

முன்னாள் சட்டமன்றப் பேரவை உறுப்பினரான திரு. எம்.எஸ். இராதாகிருஷ்ணன் அவர்கள் 1971-ஆம் ஆண்டு முதல் 1976-ஆம் ஆண்டு வரை, அன்றைய வட ஆற்காடு மாவட்டம், தண்டராம்பட்டு தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சீரிய முறையில் பணியாற்றி உள்ளார்.

திரு. எஸ். அரங்கநாதன் அவர்கள், 1980-ஆம் ஆண்டு முதல் 1984-ஆம் ஆண்டு வரை, தர்மபுரி மாவட்டம், தர்மபுரி தொகுதியிலிருந்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, நல்லமுறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. அ. தியாகராஜ காடுவெட்டியார் அவர்கள், 1962-ஆம் ஆண்டு முதல் 1967-ஆம் ஆண்டு வரை, அன்றைய திருச்சிராப்பள்ளி மாவட்டம், புதுக்கோட்டை தொகுதியிலிருந்தும், 1971-ஆம் ஆண்டு முதல் 1976-ஆம் ஆண்டு வரை திருமயம் தொகுதியிலிருந்தும் இருமுறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறந்த முறையில் பணியாற்றி உள்ளார்.

திரு. அ. சுப்பு அவர்கள், 1989-ஆம் ஆண்டு முதல் 1991-ஆம் ஆண்டு வரை சேலம் மாவட்டம், ராசிபுரம் தொகுதியிலிருந்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்புறப் பணியாற்றி உள்ளார்.

திரு. ஆர். எஸ். ஆறுமுகம் அவர்கள், 1952-ஆம் ஆண்டு முதல் 1957-ஆம் ஆண்டு வரை திருநெல்வேலி தனித் தொகுதியிலிருந்தும், 1962-ஆம் ஆண்டு முதல் 1967-ஆம் ஆண்டு வரை கங்கைகொண்டான் தனித் தொகுதியிலிருந்தும் மற்றும் 1985-ஆம் ஆண்டு முதல் 1988-ஆம் ஆண்டு வரை ஒட்டப்பிடாரம் தனித் தொகுதியிலிருந்தும் மூன்று முறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு மிகச் சீரிய முறையில் பணியாற்றி உள்ளார்.

மேலும், 1957-ஆம் ஆண்டு முதல் 1962-ஆம் ஆண்டு வரையிலும், 1967-ஆம் ஆண்டு-முதல் 1971-ஆம் ஆண்டு வரையிலும் இருமுறை பாராளுமன்ற மக்களவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்புறப் பணியாற்றி உள்ளார்.

திரு. டி. இராசரத்தினம் அவர்கள், 1967-ஆம் ஆண்டு முதல் 1970-ஆம் ஆண்டு வரையிலும், 1971-ஆம் ஆண்டு முதல் 1976-ஆம் ஆண்டு வரையிலும், அன்றைய செங்கற்பட்டு மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் தொகுதியிலிருந்தும் 1977-ஆம் ஆண்டு முதல் 1980-ஆம் ஆண்டு வரையிலும், மற்றும் 1980-ஆம் ஆண்டு முதல் 1984-ஆம் ஆண்டு வரையிலும், பூவிருந்தவல்லித் தொகுதியிலிருந்தும் தொடர்ந்து நான்கு முறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, செவ்வனே பணியாற்றி உள்ளார்.

அன்னார்களின் மறைவு குறித்து அவர்களை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தினையும் இப்பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன். இயற்கை எய்திய இப்பெரியவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித் துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு மணித்துளிகள் மௌனமாக எழுந்து நின்றனர்).



16498

## 2. இரங்கல் தீர்மானங்கள்.

முன்னாள் அமைச்சர் திருமதி ஜோதி வெங்கடாசலம் மறைவு மற்றும் உறுப்பினர் திரு. என். ஜி. வேணுகோபால் மறைவு குறித்து

முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இரங்கல் தீர்மானங்கள். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட இரண்டு இரங்கல் தீர்மானங்களை மொழிகிறேன் :

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரும், தமிழ்நாட்டின் முன்னாள் அமைச்சரும் மற்றும் கேரள மாநிலத்தின் முன்னாள் ஆளுநருமான திருமதி ஜோதி வெங்கடாசலம் அவர்கள் 28—11—1992 அன்று மறைவுற்ற செய்தி கேட்டு இப்பேரவை மிகவும் ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

திருமதி ஜோதி வெங்கடாசலம் அவர்கள் 1953-ஆம் ஆண்டி விருந்து 1954-ஆம் ஆண்டு வரை மதுவிலக்குத் துறை அமைச்ச ராகப் போற்றத்தக்க வகையில் பணியாற்றியுள்ளார் 1954-ஆம் ஆண்டு முதல் 1962-ஆம் ஆண்டு வரை அன்றைய சென்னை சட்டமன்ற மேலவை உறுப்பினராகப் பணியாற்றிய அவர் 1962-ஆம் ஆண்டு முதல் 1967-ஆம் ஆண்டு வரை சென்னை எழும்பூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சராக சீரிய முறையில் பணியாற்றியுள்ளார். மேலும் 1971-ஆம் ஆண்டிலிருந்து 1976-ஆம் ஆண்டு வரை திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் (செ.வ.), தொகுதியி லிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக் கப்பட்டு சிறந்த முறையில் பணியாற்றியுள்ளார். 1977-ஆம் ஆண்டு முதல் 1982-ஆம் ஆண்டு வரை கேரள மாநில ஆளுநராகப் பதவி வகித்தார். மேலும் 5 ஆண்டு காலம் கௌரவ நீதிமன்ற நடுவராக திறம்பட செயலாற்றியுள்ளார். சிறந்த நிர்வாகி எனப் போற்றப்பட்டவர். தாழ்த்தப்பட்ட மக்கள் நலனில் அக்கறை கொண்டவர் என்ற பெருமை படைத்ததோடன்றி மகளிர் மற்றும் குழந்தைகளின் முன்னேற்றத்திற்காகவும், மேன்மைக்காகவும் தனது வாழ்நாளை ஒப்படைத்தவர். அவரது மறைவு குறித்து அவரை இழந்து விட்ட அவரின் குடும்பத்தினர்க்கு இப் பேரவை தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறது."

D
V 2-11, 31/N93
N93-2-241

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1993 பிப்ரவரி 5

''இனிய பண்பும், நல்ல உள்ளமும், செயல் ஆற்றலும் உடையவரும், இப்பேரவையில் வட ஆற்காடு-அம்பேத்கர் மாவட்டம், இராணிப்பேட்டைத் தொகுதியிலிருந்து தேர்ந் தெடுக்கப்பட்ட உறுப்பினருமாகிய திரு. என். ஜி. வேணு கோபால் அவர்கள் 24—10—1992-ஆம் நாளன்று மறைந்த துயரச் செய்தி கேட்டு இப்பேரவை வருந்துகிறது. அன்னாரின் குடும்பத்தினருக்கு தனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத் தையும் இப்பேரவை தெரிவித்துக் கொள்கிறது.''.

திருமதி ஜோதி வெங்கடாசலம் அவர்கள் பல்வேறு தன்மைகளிலே இந்த மாநிலத்திலே பாடுபட்டவர்கள் என்பதை நாம் அனைவரும் நன்கு உணர்வோம். அவர்கள் இதே சட்டமன்றப் பேரவையில் உறுப்பினராக இருந்ததோடு மட்டுமல்லாமல். தமிழகத்தினுடைய அமைச்சர் பொறுப்பை யும் ஏற்றுக்கொண்டு வாழ்ந்தார். அதுமட்டுமல்லாமல், தமிழகத்திலிருந்து அகில இந்திய அளவில் தேர்ந்தெடுக்கப்பட்டு நியமிக்கப்பட்ட முதல் பெண் ஆளுநராகத் திகழ்ந்த பெருமையும் திருமதி ஜோதி வெங்கடாசலம் அவர்களுக்கு உண்டு. அவர்கள் 1917-ஆம் ஆண்டு பர்மாவிலே பிறந்தவர் என்றாலும், பர்மாவிலே சீனியர் கேம்பிரிட்ஜ் வரை படிப்பினை முடித்து, பிறகு திரு. பி. வி. எஸ். வெங்கடாசலம் அவர் களைத் திருமணம் செய்துகொண்டதன் காரணமாக, இங்கே தமிழகத்திற்கு வந்து, தமிழகத்திலே தம்முடைய வாழ்க்கையை சிறப்புறத் தொடங்கியவர்கள் ஆவார்கள்.

அவர்கள் மூதறிஞர் இராஜாஜி அவர்களுடைய் அமைச்ச ரவையிலேயும், பெருந்தலைவர் காமராஜர் அவர்களுடைய அமைச்சரவையிலேயும், பெரியவர் எம். பக்தவத்சலம் அவர் களுடைய அமைச்சரவையிலேயும் அமைச்சராக இருந்து பணி யாற்றி எல்லோருடைய பாராட்டுதலையும், போற்றுதலை யும் சிறப்பாகப் பெற்றவர்கள் ஆவார்கள். அவர்கள் மது விலக்குத் துறை அமைச்சராக இருந்ததோடு மட்டுமல்லாமல், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சவராகவும் இருந்து சிறந்த பணிகள் பலவற்றையும் ஆற்றியிருக்கின்றார்கள்.

அதுமட்டுமல்லாமல் கௌரவ மாகாண நீதிபதியாகவும் அவர் பணியாற்றிப் பெரும் புகழும் பெற்றார்கள். மாநில சமூக சேவை சங்கத்தினுடைய துணைத் தலைவராக இருந்து, அரும் பணிகள் பல ஆற்றியிருக்கிறார்கள். தாழ்த்தப்பட்டோர் நல்வாழ்வு சங்கங்கள் பலவற்றுக்கு அவர்கள் தலைமை தாங்கி, தாழ்த்தப்பட்டோர் நலன் குறித்தும், தாழ்த்தப்பட்ட வர்களுடைய மேம்பாடு குறித்தும் அரும்பெரும் பணிகள் பலவற்றையும் ஆற்றி வந்திருக்கிறார்கள்.



1993 பிப்ரவரி 5] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]
முற்பகல் 10-40

அதுமட்டும் அல்லாமல் பல்வேறு துறைகளில் பெண்கள் முன்னேற்ற நல்வாழ்வுச் சங்கங்களோடு எல்லாம் தொடர்பு கொண்டு பெண்களுடைய முன்னேற்றத்திற்கும் அரும்பாடு பட்டவர்கள் ஆவார்கள். அதோடு அல்லாமல் குழந்தைகள் நலன் கருதி மேற்கொள்ளப்படுகின்ற எல்லா முயற்சிகளிலேயும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு குழந்தைகளுடைய நல்வாழ்விற் காகவும் அரும்பாடுபட்டு வந்திருக்கிறார்கள். திரைப்பட தணிக்கைக் குழு, அனைத்திந்திய உணவு மற்றும் பழங்கள் பாதுகாப்போர் சங்கம், இராமேஸ்வரம் கோவில் அறங்காவலர் குழு, கோவூர் சோமசுந்தரேசுவரர் அறங்காவலர் குழு, சென்னை பல்கலைக் கழக ஆட்சி மன்றக் குழு ஆகியவற்றில் உறுப்பினர்களாக இருந்து சிறந்த சமூகத் தொண்டுகள் ஆற்றியிருக்கிறார்கள்.

திருமதி ஜோதி வெங்கடாஜலம் அவர்கள் இனிய பண்பு களுக்கு உறைவிடமாக விளங்கியவர். எல்லாக் கட்சியினரும் மதிக்கத் தக்க அளவுக்கும், சிறந்த மரியாதை செலுத்துகின்ற அளவுக்கும், எல்லோருடனும் அன்போடு பழகி, மிகச் சிறந்த தன்மைகளில் செயலாற்றி வந்தவர்கள் ஆவார்கள். அடக்கத் தையும் அமைதியையும் சிறந்த அணிகலன்களாகக் கொண்ட வர்கள். அது மட்டும் அல்லாமல் கடுமையான சொற்களோ சினக் குறிப்போ அவர்களுக்கு வந்ததே இல்லை. அப்படிப் பட்ட நிலைமையிலே, அவர்கள் சிறந்த பண்புகளுக்கு எடுத்துக் காட்டாக விளங்கி, எல்லோருடைய பாராட்டையும் பெற்ற அவர்களின் மறைவு இந்தத் தமிழ்ச் சமுதாயத்திற்கும், நமக்கும் ஒரு பேரிழப்பாகும். அந்த வகையிலேதான் அவருடைய குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலை தெரி விப்பது இந்தப் பேரவையின் பெரும் கடமையாக இருக்கிறது,

அது மட்டும் அல்லாமல் 1991-வது ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் ராணிப்பேட்டை சட்டமன்ற தொகுதியில், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக போட்டியிட்டு, வெற்றி பெற்று, இந்தப் பேரவையில் அரும்பணி ஆற்றி வந்த திரு. என். ஜி. வேணு கோபால் அவர்கள் எதிர்பாராத வகையில் மறைவுற்றது பேரதிர்ச்சியையும் பெரும் துக்கத்தையும் தருவதாகும். அவருக்கு 55 தான் வயது என்றாலும் இவ்வளவு விரைவிலே அவருடைய முடிவு ஏற்படும் என்று யாரும் எதிர்பார்க்க வில்லை. எதிர்பாராத வகையிலே மாரடைப்பு ஏற்பட்டதன் காரணமாக, அந்த நோய்க்கு பலியான அவர் மறைவு எய்தினார். அந்த வகையிலே அவர் ராணிப்பேட்டையிலே பிறந்து வளர்ந்து, அங்கேயே எஸ். எஸ். எல். சி. படிப்பை முடிக்கின்ற அளவுக்கு, படிப்புத் திறனைப் பெற்றவர். அவர் ஈ.ஐ.டி. பாரி கம்பெனியிலே தலைமைக் கண்காணிப்பாளராக, சீஃப் சூப்பர் வைசராகப் பணியாற்றி வந்தார். அவர் அனைத்திந்திய

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தோற்றம் பெற்ற காலம் முதற்கொண்டு, தன்னை அதில் ஈடுபடுத்திக்கொண்டு தன்னுடைய நேரத்தையும், நினைப்பையும் உழைப்பையும் அதனுடைய வளர்ச்சிக்கு மிகச் சிறப்பாகப் பயன்படுத்தி வந்தவர்கள் ஆவார்கள். ராணிப்பேட்டை நகர அ.இ.அ.தி.மு.க. வினுடைய பொருளாளராகவும், அண்ணா தொழிற்சங்கப் பேரவையினுடைய செயலாளராகவும், பொருளாளராகவும் இருந்து பணி ஆற்றி வந்தவர்கள் என்பது மட்டும் அல்லாமல் தொழிற்சங்கத்தோடு நீண்ட பெருங்காலமாகத் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு, ராணிப்பேட்டைப் பகுதியிலே தொழிலாளர்களுடைய நலன் கருதிப் பல்வேறு முயற்சிகளிலே ஈடுபட்டுப் பல்வேறு வெற்றிகளையும் கண்டவர்கள் ஆவார்கள். அவர் சட்டமன்ற தொகுதிப் பணிகளை மிக விறுவிறுப்போடும் சுறுசுறுப்போடும் ஆற்றி தொகுதிவாழ் மக்களுடைய அன்பையும் அரவணைப்பையும் பெறுவதிலே தன்னுடைய நற்பண்புகளையெல்லாம் வெளிப்படுத்தியவர்கள் ஆவார்கள். அவர் கட்சித் தலைமைக்கு மதிப்பும் மரியாதையும் தந்து கட்டுப்பாட்டைப் பேணி, கண்ணியத்தோடு தன்னுடையக் கடமையை ஆற்றி வந்தவர் என்பதிலே என்னைப் போன்றவர்களுக்கெல்லாம் மிகுந்த மதிப்பும் நல்ல நம்பிக்கையும் அவர்களிடத்திலே உண்டு. அவர் பழகுவதற்கு இனிய பண்புகள் நிறைந்தவர். பகட்டு, படாடோபம், ஆரவாரம், ஆடம்பரம் ஆகியவற்றிற்கு சிறிதும் இடம் கொடுக்காமல் அடக்கத்தையும் அமைதியையும் கொண்டு அதன் மூலமாகப் பிறருடைய நல்ல அன்பையும் அரவணைப்பையும் பெறுவதிலே சிறந்து நின்று பணியாற்றியவர். அவர் இந்தப் பேரவையிலே இருந்து மறைந்து விட்டாரே என்பதை எண்ணி நாமெல்லாம், துக்கமும் துயரமும் கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். அவருடைய மறைவு அனைத்திந்திய அண்ணா தி.மு.க.விற்கு மட்டும் அல்லாமல் இந்தப் பேரவைக்கும் பேர் இழப்பாகும் என்ற முறையில் அவரது மறைவு குறித்து அவருடைய குடும்பத்திற்கு இந்தப் பேரவை தன்னுடைய இரங்கலை தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறது. அந்த முறையிலேதான் இந்தப் பேரவை தன்னுடைய இரங்கலை இரு குடும்பங்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறது என்ற இரண்டு தீர்மானங்களையும் நான் முன்மொழிகிறேன். இந்தப் பேரவை வழிமொழிந்து நிறைவேற்றித்தரும் என்று எதிர்பார்க்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

முற்பகல் 10-45

<u>திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவை முன்னவர் அவர்கள் 2 இரங்கல் தீர்மானங்களை இங்கே முன்மொழிந்திருக்கிறார்கள்





மொழிவாரி மாநிலம் அமைக்கப்படுவதற்கு முன்னால் ஒன்று
பட்ட சென்னை மாநிலத்தின் அமைச்சராகப் பணியாற்றியவர்
திருமதி ஜோதி வெங்கடாசலம் அவர்கள். அதற்குப் பின்னால்
இந்த மாநில அமைச்சராகவும் பணியாற்றி இருக்கிறார்கள்.
1953-லேயிருந்து 1957 வரையிலேயும் 1962-வது ஆண்டிலே
யிருந்து 1967-ஆம் ஆண்டு வரையிலேயும் அமைச்சராக
இங்கே பணியாற்றியவர்கள் ஜோதி வெங்கடாசலம் அவர்கள்.
அவருடைய சிறப்பியல்புகளைப் பற்றி அவர் எதற்காக
வாழ்ந்தார் எந்த உயரிய லட்சியங்களுக்காக வாழ்ந்து காட்டி
னார்., போராடினார், என்பதையும் அவைமுன்னவர் அவர்கள்
தெளிவாக எடுத்துரைத்தார்கள். 1917-ஆம் ஆண்டில் பர்மாவில்
மேன்யோவிலே அவர் பிறந்தார். பர்மா அரசாங்கத்தில்
ரங்கூன் தலைமைச் செயலகத்தில் நிதித் துறையில் உதவிச்
செயலாளராகப் பணியாற்றிக்கொண்டிருந்த குப்புராம் என்பவ
ருடைய மகளாக அவர் அன்றைய தினம் பிறந்தார். பர்மா
பள்ளியிலேதான் அவர் துவக்கக் கல்வி பயின்றார். சீனியர்
கேம்பிரிட்ஜ் வரை அவர் ஆங்கிலேயர்கள் படிக்கின்ற பள்ளிக்
கூடத்திலே, அந்தக் காலத்திலே படித்துவிட்டு சென்னைக்கு
வந்து வெங்கடாசலம் அவர்களை மணந்து கொண்ட நாளிலே
யிருந்து தமிழகத்திலே அடக்கி ஒடுக்கப்பட்ட சமுதாயங்
களுடைய நல்வாழ்வுக்காகவும், உரிமைக்காகவும், அவர்
போராடினார். இளம் வயதிலிருந்தே உயர்குடி பெண்ணாக
கருதக்கூடிய அளவுக்கு அவருடைய வாழ்க்கைத்தரம் உயர்ந்து
இருந்தாலும்கூட, தன்னுடைய அந்த பிறப்பிலே பெருமிதம்
கொள்ளாமல் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக, பின்தங்கிய
சமுதாய மக்களுக்காக, குறிப்பாக பெண் உரிமைக்காக
போராடியவர் ஜோதி வெங்கடாசலம் அவர்கள். இங்கே
1953-ஆம் ஆண்டு அவர் அமைச்சராக இருந்தபோது மதுவிலக்கு
துறை அவருடைய கையிலே கொடுக்கப்பட்டிருந்தது.
அன்றையதினம் மதுவிலக்கு நாட்டிலே அமல்படுத்தப்பட்டு
6, 7 ஆண்டு காலம் ஆகியிருந்தாலும்கூட சில பெரிய மனிதர்கள்
மதுவிலக்கு கொள்கைக்கு எதிராக அரசினுடைய சட்டத்
திற்குப் புறம்பாக நடந்து வருகின்ற சம்பவங்கள் அவருடைய
கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டபோது அன்றைய முதல்
அமைச்சர் இராஜாஜி அவர்களிடத்திலே அனுமதி கோரினார்.

நான் சிலர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டிய
நிலைமை ஏற்பட்டு இருக்கிறது. உங்களுடைய அனுமதி
வேண்டும் என்று கோரினார். இராஜாஜி அவர்களும் மனம்
உவந்து அந்த அனுமதியைக் கொடுத்தார்கள். குறிப்பாக
பெண் இனத்திற்கு எதிராக நடைபெறுகின்ற கொடுமைகளைக்
களைந்தெறிந்து இந்த மதுவிலக்கு கொள்கையைத் தீவிரமாக
அமல்படுத்துவேன் என்று சொல்லி, சென்னை நகரத்திலே
அன்றையதினம் மிகப்பெரிய ஜாம்பவானாகக் கருதப்பட்ட
ஒரு நபர் மதுவிலக்குக் கொள்கையை எப்படி மீறிக்கொண்
டிருந்தாரோ, மதுவிலக்கு கொள்கையை மட்டுமல்ல; பெண்
உரிமையை எப்படித் தவறாக பாழ் அடித்துக்கொண்டிருந்தாரே

அந்த நபருக்கு எதிராக இராஜாஜி அவர்களுடைய அனுமதியோடு அன்றைய தினம் நடவடிக்கை எடுத்தவர் ஜோதி வெங்கடாசலம் அவர்கள். அந்தப் பெண், தான் பாதிக்கப்பட்ட செய்தியை காலையிலே தன்னுடைய தாயோடு வந்து அந்த அம்மையாரைச் சந்தித்து சொன்ன நேரத்திலே, அவர் கண்ணீர் உகுத்தபடி சொன்னார்; தவறு நேர்ந்து விட்டது. நேர்ந்துவிட்ட தவறுக்காக நிச்சயமாக பிராயச்சித்தம் காண்கின்ற வகையில் கடுமையான நடவடிக்கை நான் எடுக்கப் போகிறேன் என்று உறுதி கூறி அன்று மாலையே அந்த பெரிய மனிதரையும், அந்த பெரிய மனிதரோடு சேர்ந்து பலரையும் கைது செய்து சட்டத்தின் முன்னாலே நிறுத்தியவர் ஜோதி வெங்கடாசலம் அவர்கள்.

ஆக, கொண்ட கொள்கைக்காக அவர் எப்போதும் போராடத் தயங்கியதில்லை. உயர்ந்த இலட்சியங்களுக்காகப் போராடத் தயங்கியதில்லை. குறிப்பாக சென்னை நகரத்தையும், சென்னை நகரைச் சுற்றியுள்ள பகுதிகளிலேயும் தாழ்த்தப்பட்ட மக்களுடைய உரிமைகளுக்காக தாழ்த்தப்பட்ட மக்களுடைய நல்வாழ்வுக்காக பல சங்கங்களை அமைத்தவர் ஜோதி வெங்கடாசலம் அவர்கள், அவர்களுக்காகப் போராடியவர். அவர்களுடைய மேம்பாட்டிற்காக ஒவ்வொரு கட்டத்திலேயும் போராடியவர் ஜோதி வெங்கடாசலம்.

அவர் காமராஜர் ஆட்சிக் காலத்தில் நல்வாழ்வுத் துறை அமைச்சராக பணியாற்றியிருக்கிறார். அவருடைய காலத்திலே தான் தமிழகத்திலே 4 புதிய மருத்துவ கல்லூரிகள் துவங்கின. அதற்கு அவர் காரணமாக இருந்தார். கோவை, தஞ்சாவூர், திருநெல்வேலி, செங்கற்பட்டு ஆகிய ஊர்களில் புதிய மருத்துவக் கல்லூரிகள் திறக்க காரணமாக இருந்தவர் ஜோதி வெங்கடாசலம்.

அதே போல 1977-ஆம் ஆண்டிலிருந்து 1982-ஆம் ஆண்டு வரை கேரளாவினுடைய ஆளுநராக பணியாற்றியிருக்கிறார் ஜோதி வெங்கடாசலம்.

1980-ஆம் ஆண்டு அன்னை இந்திரா காந்தி பிரதமராகப் பொறுப்பு ஏற்றபோது பலரும் ஜோதி வெங்கடாசலத்தைப் பதவி இழக்கச் செய்ய வேண்டும், மாற்ற வேண்டும் என்று கோரிக்கை வைத்தார்கள். அன்னை இந்திரா காந்தி அவர்கள் மறுத்து விட்டார்கள். அந்த அம்மையாரை எனக்குத் தனிப்பட்ட முறையிலே தெரியும். அவர் ஒரு உயர்ந்த இலட்சியத்திற்காக எப்போதுமே போராடிக் கொண்டு இருப்பவர். அவரை நான் மாற்ற மாட்டேன் என்று அன்னை இந்திரா அவர்கள் சொன்னார்கள். இந்திரா காந்தி அவர்கள் வைத்த நம்பிக்கைக்குப் பாத்திரமாக கடைசி வரை அவரும் வாழ்ந்து காட்டினார். அப்படிப்பட்ட அன்னை ஜோதி வெங்கடாசலத்தினுடைய இழப்பு இந்தச் சமுதாயத்திற்கு ஒரு பேரிழப்பு



எனவே அவருடைய குடும்பத்தாருக்கு அனுதாபம் தெரிவிக்கின்ற, இரங்கல் தெரிவிக்கின்ற இந்தத் தீர்மானத்திலே எதிர்க்கட்சியினுடைய சார்பில் எங்களுடைய இரங்கலையும் நாங்கள் தெரிவித்துக்கொள்கிறோம்.

அதே போல ராணிப்பேட்டையிலிருந்து இந்தப் பேரவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட என். ஜி. வேணுகோபாலனுடைய அகால மரணம் உள்ளபடியே வருத்தத்திற்குரியது. அவர் தொழிலாளர் தலைவராக பொது வாழ்க்கையிலே இளம் வயதிலேயே ஈடுபட்டவர். அவரை முதியவர் என்று நிச்சயமாகச் சொல்ல முடியாது. இன்னும் இளமைப் பருவத்தை முழுவதும் தாண்டாத நேரத்தில் அவருடைய அகால மரணம் ஏற்பட்டிருக்கிறது. தொழிலாளர்களுக்காகப் போராடிய அவருடைய மறைவும் இந்தப் பேரவைக்கு ஒரு பெரிய இழப்பாகும். அவருடைய குடும்பத்தினருக்கு என்னுடைய இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன். எதிர்க்கட்சிச் சார்பில் என்னுடைய இரங்கலையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-50

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திரு. வே. தம்புசாமி.

<u>திரு. வே. தம்புசாமி :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இரங்கல் குறிப்பிலே குறிப்பிட்டதைப்போல மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் ஜோதி வெங்கடாசலம் குறித்து புகழாரம் சூட்டினார்கள். அந்த புகழாரத்தோடு என்னையும் இணைத்துக்கொண்டு மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் அன்னாருக்கு இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடு சட்டமன்ற உறுப்பினர் என். ஜி. வேணுகோபால் சம்பந்தமாகவும் அவை முன்னவர் அவர்கள் புகழ் ஆரம் சூட்டினார்கள். அந்த புகழ் ஆரத்தோடு மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் அன்னாருக்கு இரங்கலையும் தெரிவித்து அமர்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திரு. ஜி. பழனிசாமி.

<u>திரு. ஜி. பழனிசாமி :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இரங்கல் தீர்மானத்தின் மீது இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் ஆழ்ந்த இரங்கலை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். முன்னாள் அமைச்சர்

ஜோதி வெங்கடாசலம் அவர்கள் சமுதாயப்பணிக்காக, நாட்டுப் பற்றுக்காக இந்த தேசம் முன்னேறவேண்டும் என்பதற்காக அவர் ஆற்றிய பணியை இங்கே நம்முடைய அவை முன்னவர் அவர்கள் எடுத்துக் காட்டினார்கள். அவருடைய இழப்பு என்பது நம்முடைய தேசத்திற்கும், நாட்டிற்கும் ஒரு பெரிய இழப்பாகும். அவரைப் போன்றவர்கள் இந்த சமுதாய முன்னேற்றத்திற்காக அதுவும் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுடைய முன்னேற்றத்திற்காக அடிமைப்பட்டு இருந்த அந்த நேரத்தில் அவரைப் போன்றவர்கள் ஆற்றியிருக்கின்ற அந்த அரும் பணி என்பது நம்மால் நினைவு கூர்வது என்பது, அவருக்கு புகழ் அஞ்சலி செலுத்துவது என்பது நம்முடைய கடமையாகும். அவருடைய மறைவுக்காக இரங்கலை எங்களுடைய கட்சியின் சார்பில் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அதேபோல்தான் இன்றைய சட்டமன்ற உறுப்பினராக இருந்து சிறந்த முறையில் மக்களுக்கு தொண்டு செய்ய வேண்டும் என்பதற்காக நல்ல நோக்கத்தோடு பணியாற்றிய என். ஜி. வேணுகோபால் அவர்கள் ஒரு இனிய பண்பை உடையவர்கள். நல்ல ஒழுக்கம் உடைய அவர்கள் இன்றைக்கு நம்மோடு இருந்து இந்த நாட்டு மக்களுடைய நல்ல பணிகளை சுறுசுறுப்போடு பணியாற்ற அந்த பணிகளில் பகிர்ந்து கொள்ளக் கூடியவிதத்தில் இன்றைய தினம் நம்மோடு இல்லாமல் இருக்கக் கூடிய அந்த சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அவருடைய இறப்புக்கு அவருடைய குடும்பத்ினருக்கும் அவரைச் சார்ந்து இருக்கிற கட்சிக்கும் இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திரு எஸ். திருநாவுக்கரசு.

<u>திரு. எஸ். திருநாவுக்கரசு :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு டாக்டர் நிதியமைச்சர் நாவலர் அவர்கள் முன் மொழிந்த இரங்கல் தீர்மானங்களை எம்.ஜி. ஆர். அண்ணா திராவிட முன்னேற்றச் சங்கத்தின் சார்பில் வழி மொழிகிறேன். சட்டமன்ற உறுப்பினராகவும், மேலவை உறுப்பினராகவும், தமிழகத்தில் அமைச்சராகவும், அதேபோல் கேரளாவில் ஆளுநராகவும் இருந்து மிகச் சிறப்பாக பணியாற்றி ஆதி திராவிட மக்களுக்காகவும், குறிப்பாக பின்தங்கிய மக்களுக்காகவும், மொத்தமாக தமிழ்நாட்டு மக்களுக்காகவும் மிகச் சிறப்பாக பணியாற்றி மறைந்த அமரர் திருமதி ஜோதி வெங்கடாசலம் அவர்களுடைய மறைவால் வாடுகிற அவருடைய குடும்பத்தினருக்கு எனது இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்களைப் பிரிந்து வாடும் காங்கிரஸ் கட்சிக்கும் காங்கிரஸ் தொண்டர்களுக்கும் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



அதேபோல் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினராக இருந்து இந்த மன்றத்தில் ஒருசில மாதங்கள் பணியாற்றி அமரரான திரு. என். ஜி. வேணுகோபால் அவருடைய மறைவால் வாடுகிற அவருடைய குடும்பத்தாருக்கு எனது இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவரைப் பிரிந்து வாடும் அந்தத் தொகுதி, அந்தப் பகுதியில் இருக்கிற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக தொண்டர்களுக்கும் அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர் மிக குறுகிய காலம் தான் இந்த சட்டமன்றத்தில் பணியாற்றினார்கள். **

முற்பகல் 10—55

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> தயவுசெய்து திரு திருநாவுக்கரசு, இரங்கல் தீர்மானத்தின்மீது நீங்கள் பேசுகிறீர்கள் (குறுக்கீடு). இரங்கல் தீர்மானத்தில் பேசுகிறபோது தயவு செய்து இது போன்றவைகளெல்லாம் வேண்டாம். அது அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகிறது. அவருடைய சிறப்பைச் சொல்லி... (குறுக்கீடுகள்) தயவுசெய்து எல்லோரும் அமருங்கள். அது அவைக்குறிப்பிலேயிருந்து நீக்கப்பட்டு விட்டது.

<u>திரு. எஸ். திருநாவுக்கரசு :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> அதுபற்றியே வேண்டாம். நீங்கள் இரங்கல் தீர்மானத்தின்மீது பேசுங்கள்.

<u>திரு. எஸ். திருநாவுக்கரசு.</u> **

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> நீங்கள் பேசியதை நான் அவைக்குறிப்பிலேயிருந்து நீக்கியதற்குப் பிறகு நீங்கள் விளக்கம் சொல்லவேண்டியதில்லை. அதுவும் அவைக்குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகிறது.

<u>திரு. எஸ். திருநாவுக்கரசு :</u> எனவே, கட்சியின் தலைவரான மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், சக அமைச்சர்களுக்கும், மற்ற சக சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் எனது அனுதாபத்தைத் தெரிவித்து, இறந்த அவர்களுடைய குடும்பத்தினருக்கு எம். ஜி. ஆர். அண்ணா தி.மு.க.வின் சார்பிலே இரங்கலைத் தெரிவித்து, அமர்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திரு. எஸ். ஆண்டித் தேவர்.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[1993 பிப்ரவரி 5

திரு. எஸ். ஆண்டித் தேவர் : மாண்புமிகு சட்டப் பேரவைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் கொண்டு
வந்த இரங்கல் தீர்மானத்தில் அகில இந்திய ஃபார்வட் பிளாக்
கட்சியின் சார்பில் எனது இரங்கலையும் இணைத்துக் கொண்டு,
மாண்புமிகு ஜோதி வெங்கடாசலம் அவர்கள் இந்த மன்றத்
திலே அங்கத்தினராகவும் இரு முறை அமைச்சராகவும் பணி
யாற்றி இருக்கிறார்கள். அவர்கள் 1957லே இங்கே மக்கள்
நல்வாழ்வுத்துறை அமைச்சராக இருந்தபோது நான் இந்தத்
தலைமைச் செயலகத்திலே பணியாற்றியவன் என்ற முறையில்
அவர்களை நன்கு அறிவேன். அவர்களுடைய பண்பை நன்கு
அறிந்தவன். அவர்கள் மிக நல்லமுறையில், சீரிய முறையில்,
தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களுக்காக எவ்வளவு காரியங்
களை ஆற்றியிருக்கிறார்கள் என்பது இந்த நாட்டு மக்கள்
அறிந்த உண்மை. அவர்கள் இந்தமன்றத்திலே, நான் அங்கத்
தினராக இருந்தபோது கேரள மாநில கவர்னராக இருந்து,
இந்த மன்றத்திலே வந்து எங்களது தலைவர், தேசியத்
தலைவர் பசும்பொன் தேவர் அவர்களுடைய திருவுருவப்
படத்தைத் திறந்து வைத்து, அவரைப்பற்றி, அவர் காங்கிரஸ்
இயக்கத்தில் ஆற்றிய பணியினையும், இவரோடு இந்த மன்றத்
திலே இருந்தபோது அவர் ஆற்றிய செயலையும் மறக்காமல்,
தெளிவாக எடுத்துக்கூறி இந்த மன்றத்திலே பேசினார்கள்
என்பதனை நான் மறக்க முடியாது. அதேபோன்று தாழ்த்தப்
பட்ட மக்களுக்காக உழைத்த அவருடைய மறைவு இந்த
நாட்டுக்கு பேரிழப்பாகும். அவருடைய குடும்பத்தாருக்கு
அகில இந்திய ஃபார்வட் பிளாக் கட்சியின் சார்பிலே எனது
இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு என். ஜி. வேணுகோபால் அவர்
கள் குறுகிய காலம் இங்கே பணியாற்றினாலும் அண்ணா
திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக அவர் எவ்வளவோ சுறு
சுறுப்பாகப் பணியாற்றினார்கள். பழகுவதற்கு இனிய நண்பர்.
நம்மோடு தொடர்ந்து பணியாற்றாமல் நம்மைவிட்டுப் பிரிந்த
தற்கு அவருடைய குடும்பத்தாருக்கு எனது ஆழ்ந்த இரங்கலைத்
தெரிவித்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு செ. கு. தமிழரசன்.

திரு. செ. கு. தமிழரசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, மறைந்த முன்னாள் ஆளுநர், அன்னை திருமதி
ஜோதி வெங்கடாசலம் அவர்களுடைய மறைவு குறித்து
பேரவை முன்னவர் அவர்களும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்
களும் கூறிய கருத்துக்களோடு இந்தியக் குடியரசுக் கட்சியின்
சார்பிலே நான் சில இரங்கல் கருத்துக்களைச் சொல்ல விழை
கிறேன். மறைந்த, அன்னை ஜோதி வெங்கடாசலம் அவர்கள்
தாழ்த்தப்பட்ட சமுதாயத்திலேயிருந்து பிறந்திருந்தாலும்



1993 பிப்ரவரி 5] [திரு. செ. கு. தமிழரசன்]

அவர் இந்த சமுதாயத்துக்கே பெருமை சேர்க்கிற வகையிலே
மிகப் பெரிய மக்கள் பணி ஆற்றியவர். முதல் பெண் ஆளுநர்
என்கிற தகுதியைப் பெற்றவர். தமிழகத்திலே முதல் பெண்
அமைச்சர் என்கிற தகுதியைப் பெற்றவர். முதல் பெண் அறங்
காவலர் குழு உறுப்பினர் என்கிற தகுதியைப் பெற்றவர்.
இப்படிப் பல்வேறு பெருமைகளை அவர் பெற்றவர். அவர் எந்த
அளவிற்குப் பெருமை படைத்திருந்தார் என்றால், அவர் தாழ்த்
தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவரா என்று மற்றவர்களே
சந்தேகிக்கிற அளவிற்கு, வழக்கு மன்றத்திற்கே போகிற
அளவிற்கு அவருடைய பண்புகள் விளங்கியது.

முற்பகல் 11—00

அன்னை ஜோதி வெங்கடாசலம் அவர்கள், அண்ணல்
அம்பேத்கார் அவர்களின் சீரிய கோட்பாட்டினை ஏற்று, அந்தக்
காலத்திலேயே கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்.
அவருடைய குடும்பம் முழுதும் எல்லோருக்குமே கலப்புத்
திருமணம் செய்து வைத்து, சாதி ஒழிப்புக்காகப் பாடு
பட்டவர். மூதறிஞர் இராஜாஜி அவர்களால் தமிழக அரசிய
லுக்கு அறிமுகப்படுத்தப்பட்டு, அவருடைய உயிரனைய
கொள்கையான மதுவிலக்குக் கொள்கைக்கு இவரையே அமைச்
சராக நியமித்து, அதனால் அன்றைக்கு சிறப்புப் பெற்றவர்.
எல்லாவற்றுக்கும் மேலாக, இந்தப் பேரவையிலே என்னுடைய
வணக்கத்திற்குரிய தலைவர் பாபாசாகேப் அண்ணல் அம்பேத்கர்
அவர்களுடைய திருவுருவப் படத்தையும், தேவர் திருமகனார்
பசும்பொன் முத்துராமலிங்கனார் திருவுருவப் படத்தையும்
கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் அவர்களுடைய திருவுருவப்
படத்தையும், பகுத்தறிவுத் தந்தை பெரியார் அவர்களுடையத்
திருவுருவப் படத்தையும், ஆக, நான்கு திருவுருவப் படங்களை
யும் திறந்து வைப்பதற்காக, புரட்சித் தலைவர் எம்.ஜி. ஆர்.
அவர்களால் அழைக்கப்பட்டு, இந்த மன்றத்திலே 9—8—1980
அன்று யாருக்குமே இல்லாத அளவிற்கு நான்கு படங்களையும்
அவர்களே திறந்து வைத்த அளவுக்கு பெருமை பெற்றவர்.
அவர்கள் அந்தக் காலத்திலேயே—தாழ்த்தப்பட்ட மக்கள்
வணிகத் துறையிலே முன்னுக்கு வரவேண்டும் என்பதை நாம்
இன்றைக்கும் சொல்லிக்கொண்டிருக்கிறோம்—70 ஆண்டுகளுக்கு
முன்பாகவே, அவருடைய குடும்பம் மிகப்பெரிய வணிகக்
குடும்பமாக விளங்கியக் குடும்பம். தமிழகத்திலே இருந்து
ஏற்றுமதி—'எக்ஸ்போர்ட்'—செய்கிற அளவிற்கு மிகப்பெரிய
ஒரு வர்த்தக ஏற்றுமதிக் குடும்பத்தை அவர்கள் சார்ந்தவர்கள்.
பிரிட்டிஷ் குடும்பத்திற்கே இவர்களுடைய 'வெங்கடாசலம்
காண்டிமென்ட்ஸ்' என்று சொல்லப்படுகிற தொழிற்சாலை
யிலிருந்துதான் ஊறுகாயே ஏற்றுமதி செய்யப்படும். அந்த
அளவுக்கு வணிகத் துறையிலே அவர் மிகச்சிறந்த செல்வாக்குப்
பெற்றவராக விளங்கியவர்.

இசையிலே கூட கர்நாடக இசையிலே அவர்கள் மிகவும் பாண்டித்தயம் பெற்றவர்கள். அதிலே மிகுந்த ஆர்வமும் கொண்டவர்கள். எனவேதான், கலப்புத் திருமணம் அவருடைய குடும்பத்திலே செய்தபோதும்கூட, மிகப்பெரிய கர்னாடக இசை வித்துவானாகிய திரு கே. வி. மகாதேவன் அவர்களுடைய குடும்பத்தோடு சம்பந்தம் வைத்துக் கொண்டார். ஆக, எல்லா வகைகளிலும் இசையிலும், பொதுத் துறையிலும், வணிகத் துறையிலும், நிர்வாகத் துறையிலும், சிறந்து விளங்கியதோடு, பெண்கள் துறையிலும், சமூக நல வாரியத்தினுடைய முதல் துணைத் தலைவராக அந்தக் காலத்திலேயே விளங்கினார்கள். இப்படி எல்லாவற்றிலும் மிகச் சிறப்போடு விளங்கிய அன்னை ஜோதி வெங்கடாசலம் அவர்கள், இறுதிவரையிலும் தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்காகவும், சாதி ஒழிப்புக்காக சாதி ஒழிப்புப் போராட்டத்திலும் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். அவர்களுடைய மறைவு, அரசியலில் மட்டுமல்லாமல், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் மிகப்பெரிய இழப்பு. அவரை இழந்து வாடுகிற அவரது குடும்பத்தாருக்கு இந்தியக் குடியரசுக் கட்சியின் சார்பிலே இந்த அவையின் மூலமாக என்னுடைய ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல, மறைந்த இராணிப்பேட்டை சட்டமன்ற உறுப்பினர், அருமைச் சகோதரர் வேணுகோபால் அவர்கள், கட்சிக்கு எளியவராகவும் கடும்உழைப்பாளராகவும் விளங்கியவர். அந்த மாவட்டத்திலே ஒரு தொழிற்சங்கவாதியாக, தன்னுடைய அரசியல் வாழ்க்கையைத் தொடங்கி, மாவட்ட அளவிலே பல தொழிற்சங்கங்களை நிறுவி, தொழிற்சங்கப் போராட்டங்களிலே பங்குகொண்டு, சட்டமன்ற உறுப்பினராகவே பின்னர் அவர் தேர்ந்தெடுக்கப்பட்டு, மிகக் குறுகிய காலத்திலே மறைந்தது, மிகப் பெரிய வருத்தத்திற்குரிய இழப்பு. அவரை இழந்து வாடுகிற அவருடைய குடும்பத்தினருக்கும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினருக்கும், குறிப்பாக அந்த இயக்கத்தினுடைய பொதுச் செயலாளர் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுக்கும், இந்தியக் குடியரசுக் கட்சியின் சார்பிலே என்னுடைய ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து அமர்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : திரு. நா.சா. பழனிசாமி.

<u>திரு. நா. சா. பழனிசாமி</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நம் அவை முன்னவர் அவர்கள் கொண்டு வந்த இரண்டு இரங்கல் தீர்மானங்களின் மீதும் உழவர் உழைப்பாளர் கட்சியின் சார்பிலே ஒரு சில கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு அமைச்சராக தமிழக அமைச்சரவையிலே இருந்த திருமதி. ஜோதி வெங்கடாசலம் அவர்கள், பெண்கள் அரசியலுக்கும், பொது வாழ்விற்கும் வராத அந்தக் காலக்கட்டத்தி





லேயே தாழ்த்தப்பட்ட குலத்திலே பிறந்த அவர்கள், பல்வேறு பொறுப்புக்களை, சட்டமன்ற உறுப்பினராக, அமைச்சராக, ஆளுநராக எல்லாம் பணியாற்றி, மக்கள் சேவை செய்த ஒரு மகத்தான தலைவர். அவரை இந்த நாடு இழந்து இருப்பதற்கு, அவரின் குடும்பத்தார்க்கும், அவரைச் சார்ந்த இயக்கத்தினருக்கும் என்னுடைய சார்பிலேயும், உழவர் உழைப்பாளர் கட்சியின் சார்பிலேயும் இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின், இராணிப்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு. என். ஜி. வேணுகோபால் அவர்கள், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கொள்கைப் பற்றுக் கொண்டவராக மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய உண்மைத் தொண்டராகப் பணியாற்றி, சட்டப் பேரவையிலே மிகுந்த சேவை செய்த சக சட்டமன்ற உறுப்பினர் அவர்கள். அவர்களின் மறைவு, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், இந்தச் சட்டப் பேரவைக்கும், நாட்டிற்கும் தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும் ஒரு பேரிழப்பாகும். அவர்கள் அனைவருக்கும் எனது சார்பிலும் உழவர் உழைப்பாளர் கட்சியின் சார்பிலும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொண்டு விடை பெறுகிறேன். வணக்கம்.

முற்பகல் 11-05

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : பேரவையின் அனைத்துக் கட்சித் தலைவர்களும் தெரிவித்திருக்கிற இரங்கலோடு என்னுடைய இரங்கலையும் பேரவையின் சார்பில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மறைந்த பெருமைக்குரிய திருமதி. ஜோதி வெங்கடாசலம் அவர்கள் அமைச்சராகவும், கவர்னராகவும் திகழ்ந்தார் என்பதோடு கூட, பெண் இனத்தின் உரிமைக்காக சுதந்திரம் அடைந்த அந்தக் காலக்கட்டத்திலேயே குரல் கொடுக்கிற ஒரு வீராங்கனையாகவும் திகழ்ந்து வந்திருக்கிறார். இந்திய நாட்டில் தமிழகத்தின் தனிச் சிறப்பை நிலைநாட்டிய சிறப்புக்குரிய அவர்களுடைய மறைவு என்பது அவர் சார்ந்திருந்த அந்தக் கட்சிக்கு மட்டும் இழப்பு என்று எவரும் கருத முடியாது. தமிழகத்திற்கே, ஒட்டுமொத்த இந்தியத் துணைக் கண்டத்திற்கே, பேரிழப்பாகத்தான் அவருடைய மறைவு கருதப்படுகிறது. எனவே, அவருடைய மறைவுக்காக நம்முடைய அனுதாபம் என்பது ஒட்டுமொத்தமாகத் தமிழகத்தைத் தலை நிமிரச் செய்த ஒரு பெருமாட்டியின் மறைவு என்பதோடு, அனைவரும் அவருடைய மறைவுக்காகப் பெரும் வேதனையடைகிறோம் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே போல், இந்தப் பேரவையின் மாண்புமிகு உறுப்பினராக ஏறத்தாழ ஓராண்டுக்கு மேலாகப் பணியாற்றி இருக்கிற சகோதரர் திரு. என். ஜி. வேணுகோபால் அவர்கள் இங்கே பணியாற்றி வந்த காலத்தில் இந்தப் பேரவையின் மரபை, இதுவரையிலேயும் நாம் கட்டிக் காத்து வந்திருக்கிற மாண்பை எந்த அளவுக்குக் கட்டிக் காத்தார் என்பதை நாம் நன்கு அறிவோம். பல்வேறு பிரச்சினைகளிலேயும் அவர் இந்தப் பேரவையில் தன்னுடைய கருத்துக்களை எடுத்து வைத்திருக்கிறார். கேள்வி நேரத்தின் போது தன்னுடைய தொகுதி மக்களுடைய பல்வேறு பிரச்சினைகள் குறித்து துணைக் கேள்வி வாயிலாக, எடுத்து வைப்பதில் அவர் என்றைக்கும் பின்வாங்காத அளவில் தன்னுடையத் தொகுதி மக்களுக்காகப் பணியாற்றியவர் ஆவார். அப்படிப்பட்டவர்தான் சார்ந்திருந்த இயக்கத்தில் 1972 முதல் எத்தனையோ சோதனைக் காலங்களில் எல்லாம் தன்னுடைய நிறத்தை அடிக்கடி மாற்றிக் கொள்ளாத வகையில் பணியாற்றி, தலைமைக்கு விசுவாசமாகவும், தான் கொண்ட கொள்கைக்குப் பிடிப்புடன் பணியாற்றிய பெருமகனாவார் அவர். அப்படிப்பட்ட ஒரு சீரிய தொண்டர், சிறந்த பண்பாளர், சட்டமன்றத்தில் இந்தப் பேரவையின் மரபைக் கட்டிக்காத்து, அதே நேரத்தில் தன்னுடைய தொகுதியின் பல்வேறு பிரச்சினைகளை எடுத்து வைத்து, தொகுதி மக்களின் நம்பிக்கைக்கு உரியவராகவும் பணியாற்றிய அந்தப் பெருமகனின் இழப்பும், அனைவரும் வருந்தத்தக்க, வேதனைப்படத்தக்க மறைவு ஆகும். அப்படிப்பட்ட வகையில் இரு பெரும் மக்களுடைய மறைவு குறித்து பேரவை தன்னுடைய இரங்கலைத் தெரிவிக்கிறது என்கிற மாண்புமிகு முன்னவர் அவர்களுடைய தீர்மானங்களோடு என்னுடைய உணர்வுகளையும் இணைத்துக்கொண்டு, இரங்கலையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இரு தீர்மானங்களையும் நிறைவேற்றும் முகத்தான், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித் துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு மணித் துளிகள் மௌனமாக எழுந்து நின்றதன் மூலம் இரண்டு தீர்மானங்களும் நிறைவேற்றப்பெற்றன.)

முற்பகல் 11–10

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u>: மறைந்த பெரியவர்களுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில், பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் ஒத்திவைக்கப்படுகின்றன. பேரவை மீண்டும் 8—2—1993 திங்கட்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை முற்பகல் 11–11 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.



## 3. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

1. சென்னை, பன்னாட்டு விமான நிலையத்திற்குச் சொந்தமான டிசிஎச் 3903 எண் கொண்ட ஆம்புலன்ஸ் மோட்டார் வண்டிக்கு வரி விதிப்பிலிருந்து விலக்களித்தலும் மேலும் அந்நிறுவனத்திற்குச் சொந்தமான மூன்று மோட்டார் வண்டிகளுக்கு ஏற்கனவே விலக்களிக்கப்பட்டதை ரத்து செய்தலும் குறித்து உள் (போக்குவரத்துத்) துறையின் 29-6-1992–ஆம் நாளிட்ட 1056–ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1974–ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

2. 1983–ஆம் ஆண்டு தமிழ்நாடு வடிப்பாலை விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறையின் 26–2–1992–ஆம் நாளிட்ட 45–ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

3. 1948–ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய அச்சக சார்நிலைப் பணி விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 27–4–1992–ஆம் நாளிட்ட 228–ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1971–ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசைப் பகுதி (அபிவிருத்தி மற்றும் அகற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 11/1971) 72 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

4. 1974–ஆம் ஆண்டு தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (ஒழுங்குமுறை) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து கல்வித் துறையின் 13–11–1991–ஆம் நாளிட்ட 1063–ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1973–ஆம் ஆண்டு தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (ஒழுங்குமுறை) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 29/1974) 57 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

5. 12-3-1980-ஆம் நாளிட்ட வருவாய்த் துறையினால் வெளியிடப்பட்ட அறிவிக்கை எண் 11 (2)?வருவாய்/1-729/80-யில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வருவாய்த்துறையின் 22—6—1990–ஆம் நாளிட்ட 1435–ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1975 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது இடங்கள் (அங்கீகரிக்கப்படாத குடியிருப்புகளை அகற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1976) 20 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

[1993 பிப்ரவரி 5

6. 1959—ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 3-2-1992—ஆம் நாளிட்ட 41 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959—ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

7. 1954 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழு (ஒழுங்குமுறை) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் 16-3-1992—ஆம் நாளிட்ட 90—ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

8. 1988—ஆம் ஆண்டு தமிழ்நாடு நுகர்வோர் பாதுகாப்பு விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் 30-5-1990—ஆம் நாளிட்ட 446 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1986-ஆம் ஆண்டு நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின் மத்தியச் சட்டம் 68/1986) 31 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

9. 1988-ஆம் ஆண்டு தமிழ்நாடு நுகர்வோர் பாதுகாப்பு விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் 29-11-1990-ஆம் நாளிட்ட 1100-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1986-ஆம் ஆண்டு நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 68/1986) 31 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

10. 1988 ஆம் ஆண்டு தமிழ்நாடு நுகர்வோர் பாதுகாப்பு விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் 7-11-1991-ஆம் நாளிட்ட 414 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1986—ஆம் ஆண்டு நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 68/1986) 31 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

11. 1958—ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிற் தகராறுகள் விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் 14—1—1992—ஆம்



1993 பிப்ரவரி 5]

நாளிட்ட 67 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1947 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 14/1947) 38 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

12. 1954 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக் குழு (ஒழுங்குமுறை) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் 6—3—1992 ஆம் நாளிட்ட 80 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

13. 15—5—1991 ஆம் நாளிட்ட உள் துறையின் அறிவிக்கை எண். 11 (2)/எச்.ஓ./2507/91-யில் திருத்தமொன்று செய்வது குறித்து உள் துறையின் 24—6—1992 ஆம் நாளிட்ட 255 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக் கூர்திகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

14. திருச்சி மாவட்டம், பிச்சாண்டார் கோயில் நலிவுற்ற மக்கள் நல்வாழ்வு சங்கத்தினால் வாங்கப் பெற்ற சிறிய பேருந்துக்கு வரி செலுத்துவதிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 29—7—1992 ஆம் நாளிட்ட 280 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி பகுதிக்குள் நுழைவின்மீதான வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1990) 18 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

15. செங்கற்பட்டு, திருவாளர்கள் ஜனநாயக கல்வி சங்கம் மற்றும் கிராமப்புற வளர்ச்சி நிறுவனத்தினால் வாங்கப்பட்ட மகேந்திரா சிறிய பேருந்திற்கு வரி செலுத்துவதிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 29—7—1992 ஆம் நாளிட்ட 281 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி பகுதிக்குள் நுழைவின் மீதான வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1990) 18 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

16. காஞ்சிபுரம், ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் அறக் கட்டளைக்கு நன்கொடையாக அளிக்கப்பட்ட பத்மினி பிரிமீயர் கார்க்காக வரி செலுத்துவதிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக் கட்டளைகள் துறையின் 31—7—1992—ஆம் நாளிட்ட 288—ஆம் எண் அரசாணையில்

[1993 பிப்ரவரி 5

வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1990–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி பகுதிக்குள் நுழைவின் மீதான வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1990) 18(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

17. அம்பத்தூர், நியூ செஞ்சுரி நலச் சங்கத்திற்கு சொந்தமான ஆம்புலன்ஸ் வாகனத்தை அன்பளிப்பாகவும் வாடகைக்கு உபயோகப்படுத்தாமலும் தொண்டு நோக்கங்களுக்காக பயன்படுத்தும்வரை அவ்வாகனத்திற்காக செலுத்த வேண்டிய வரியை நான்கில் ஒரு பங்காக குறைத்து வரிச் சலுகை அளிப்பது குறித்து உள் (போக்குவரத்து) துறையின் 1—4—1992–ஆம் நாளிட்ட 572–ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1990–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி பகுதிக்குள் நுழைவின் மீதான வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1990) 18(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

18. எம்.டி.பி. 509 மற்றும் எம்.டி.ஒய். 3842 ஆகிய நிலை ஊர்திகளுக்கு 1972–73 மற்றும் 1974–75 ஆண்டுகளுக்காக செலுத்தப்படவேண்டிய நிலுவை வரியை தள்ளுபடி செய்வது குறித்து உள் (போக்குவரத்து) துறையின் 19—6—1991–ஆம் நாளிட்ட 608–ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1974–ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்புச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

19. வடாற்காடு–அம்பேத்கர் மாவட்டம், சேத்துப்பட்டு செயின்ட் தாமஸ் மருத்துவமனை மற்றும் தொழுநோய் நிலையத்திற்கு சொந்தமான பதினோறு மோட்டார் வாகனங்களை அன்பளிப்பாகவும், வாடகைக்கு உபயோகப்படுத்தாமலும் தொண்டு நோக்கங்களுக்காக அவற்றை பயன்படுத்தும் வரை அவ்வாகனங்களுக்காக செலுத்தப்பட வேண்டிய வரியை நான்கில் ஒரு பங்காக குறைத்து வரிச் சலுகை அளிப்பது குறித்து உள் (போக்குவரத்து) துறையின் 19—6—1991–ஆம் நாளிட்ட 1009–ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1974–ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

20. குன்னூர், திருவாளர்கள் பாஸ்சூர் இன்ஸ்டிடியூட் ஆப் இந்தியாவிற்குச் சொந்தமான டி.என். 43–2658 எண் கொண்ட சரக்கு ஊர்தியை அன்பளிப்பாகவும், வாடகைக்கு அளிக்காமலும் தொண்டு நோக்கங்களுக்காக பயன்படுத்தும் வரை, அவ்வாகனத்திற்காக செலுத்தப்பட வேண்டிய வரியை நான்கில் ஒரு பங்காக குறைத்து வரிச் சலுகை அளிப்பது குறித்து உள் (போக்குவரத்து) துறையின் 8—7—1992–ஆம் நாளிட்ட



1993 பிப்ரவரி 5]

1105 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

21. பாண்டிச்சேரி, திருவாளர்கள் ராவுல் பவீரோ பவுண்டேசன் இந்தியாவிற்குச் சொந்தமான ப்பி.ஒய். டி. 466 எண் கொண்ட வாகனத்தை அன்பளிப்பாகவும், வாடகைக்கு அளிக்காமலும் தொண்டு நோக்கங்களுக்காக பயன்படுத்தும்வகையில் அவ்வாகனத்திற்காகச் செலுத்தப்படவேண்டிய வரியை நான்கில் ஒரு பங்காக குறைத்து வரிச் சலுகை அளிப்பது குறித்து உள் (போக்குவரத்து) துறையின் 31—7—1991 ஆம் நாளிட்ட 1207–ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1974–ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

22. நாகர்கோவில், திருவாளர்கள் நேசமணி போக்குவரத்துக் கழகத்திற்குச் சொந்தமான டி.எம்.என். 2537 எண் கொண்ட பயணிகள் மற்றும் சரக்கு ஊர்திக்காக 1—4—1984 முதல் 30—8—1988 வரை செலுத்தப்பட வேண்டிய தண்ட வரியைத் தள்ளுபடி செய்வது குறித்து உள்(போ)துறையில் 10—8—1992 ஆம் நாளிட்ட 1407–ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1974–ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

23. கன்னியாகுமரி, விவேகானந்த நினைவுப் பாறை மற்றும் விவேகானந்த கேந்திரா நிறுவனத்திற்கு சொந்தமான டி.என்.கே. 6985 மற்றும் டி.என்.கே. 1176 எண் கொண்ட மோட்டார் வாகனத்தை அன்பளிப்பாகவும், வாடகைக்கு அளிக்காமலும், தொண்டு நோக்கங்களுக்காகப் பயன்படுத்தும் வரை, அவ்வாகனத்திற்காக செலுத்தப்பட வேண்டிய வரியை நான்கில் ஒரு பங்காகக் குறைத்து வரிச் சலுகை அளிப்பது குறித்து உள் (போ) துறையின் 17—9—1991–ஆம் நாளிட்ட 1421–ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

24. இந்திய இராணுவப் பணியாளர்களுக்கு சொந்தமான வாகனத்திற்கு வேறு மாநிலத்தில் வரி செலுத்தப்பட்டால் அவற்றிற்கு இம் மாநிலத்தில் வரி செலுத்துவதிலிருந்து விலக்களிப்பது குறித்து உள் (போக்குவரத்து) துறையின் 15–10–1991 ஆம் நாளிட்ட 1536 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

25. தமிழ்நாடு மாநிலத்தில் 13,000 கிலோவுக்கு மேல் ஏற்றிச் செல்லும் அல்லது ஏற்றிச் செல்லுவதற்குப் பயன்படும் சரக்கு ஊர்திகளுக்கு வரி விகிதத்தை மாற்றியமைப்பது குறித்து உள் துறையின் 29—10—1991 ஆம் நாளிட்ட 1623 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

26. 1988 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் 5—6—1992 ஆம் நாளிட்ட 270 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) 180(5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

27. சென்னை, திருவாளர்கள் கோரமண்டல் ஸ்டீல் லிமிடெட் நிறுவனத்தினால் செலுத்தப்பட வேண்டிய வரியை 1-11-1989 முதல் மூன்று ஆண்டுக் காலத்திற்குத் தள்ளி வைப்பது குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக் கட்டளைகள் துறையின் 27—12—1992 ஆம் நாளிட்ட 89 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

28. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 28—2—1992 ஆம் நாளிட்ட 91 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

29. இராணிப்பேட்டை, திருவாளர்கள் ஸ்ரீ நிதி ஸ்டீல்ஸ் நிறுவனத்தினால் செலுத்தப்பட வேண்டிய விற்பனை வரியை 1—4—1991 முதல் மூன்று ஆண்டுக் காலத்திற்குத் தள்ளி வைப் பது குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக் கட்டளைகள் துறையின் 5—3—1992 ஆம் நாளிட்ட 102 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959—ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]





30. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி
விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிகவரிகள்
மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 6—3—1992 ஆம்
நாளிட்ட 107—ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட
அறிவிக்கை. [1959—ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது
விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5)
பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

31. கோவை, திருவாளர்கள் சர்குணா டெக்ஸ்டைல்ஸ்
நிறுவனத்தினால் செலுத்தப்பட வேண்டிய விற்பனை வரியை
6—9—1990 முதல் மூன்று ஆண்டு காலத்திற்குத் தள்ளி வைப்பது
குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறை
யின் 6—3—1992 ஆம் நாளிட்ட 110 ஆம் எண் அரசாணையில்
வெளியிடப்பட்ட அறிவிக்கை [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு
பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959)
53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

32. சென்னை, திருவாளர்கள் ஈசன் ராய்ரோலி ரிலேஸ் மற்றும்
டிவைசஸ் லிமிடெட் நிறுவனத்தினால் செலுத்தப்பட வேண்டிய
விற்பனை வரியை 1—4—1990 முதல் மூன்று ஆண்டுக் காலத்
திற்குத் தள்ளி வைப்பது குறித்து வணிக வரிகள் மற்றும் சமய
அறக்கட்டளைகள் துறையின் 29—5—1992 ஆம் நாளிட்ட 193
ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை.
(1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின்
(தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவை முன்
வைக்கப் பெற்றது.]

33. சென்னை, திருவாளர்கள் ஜக் பாய்லர்ஸ் (பிரைவேட்)
லிமிடெட் நிறுவனத்தினால் செலுத்தப்பட வேண்டிய விற்பனை
வரியை 1-10-1991 முதல் மூன்று ஆண்டுக் காலத்திற்குத் தள்ளி
வைப்பது குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள்
துறையின் 30—6—1992 ஆம் நாளிட்ட 242 ஆம் எண்
அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு
தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம்
1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

34. சென்னை, திருவாளர்கள் அலுமினியம் கம்பெனி
லிமிடெட் நிறுவனத்தினால் செலுத்தப்பட வேண்டிய
விற்பனை வரியை அந்நிறுவனம் திறக்கப்பட்ட நாளிலிருந்து
ஐந்து ஆண்டுக் காலத்திற்குத் தள்ளி வைப்பது குறித்து வணிக
வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 30—6—1992
ஆம் நாளிட்ட 243 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட
அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை
வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்
கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

[1993 பிப்ரவரி 5

35. சமய நிறுவனங்களில் சொத்துக்களை பேணுதல் மற்றும் மேலாண்மை செய்தல் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 13—7—1992 ஆம் நாளிட்ட 261 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலையத் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 22/1959) 116 (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

36. கோவை, திருவாளர்கள் கோவை நகர்ப்புற தொழுநோய் ஒழிப்பு திட்டத்திற்கு சொந்தமான மோட்டார் வாகனங்களை அன்பளிப்பாகவும், வாடகைக்கு அளிக்காமலும் தொண்டு நோக்கங்களுக்காக பயன்படுத்தும் வரை, அவ்வாகனத்திற்காக செலுத்தப்பட வேண்டிய வரியை நான்கில் ஒரு பங்காக குறைத்து வரிச் சலுகை அளிப்பது குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 8—7—1992 ஆம் நாளிட்ட 1106 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

37. திண்டுக்கல்—அண்ணா மாவட்டம், நிலக்கோட்டை, டாமியன் தொழுநோய் கட்டுப்பாடு நிலையத்திற்கு சொந்தமான ஆம்புலன்ஸ் வாகனத்தை அன்பளிப்பாகவும், வாடகைக்கு அளிக்காமலும் தொண்டு நோக்கங்களுக்காக பயன்படுத்தும் வரை அவ்வாகனத்திற்கு செலுத்தப்பட வேண்டிய வரியை நான்கில் ஒரு பங்காக குறைத்து வரிச் சலுகை அளிப்பது குறித்து உள் (போ) துறையின் 8—7—1992 ஆம் நாளிட்ட 1107 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

38. அரசு போக்குவரத்து நிறுவனங்களுக்குச் சொந்தமான பயணிகள் மற்றும் சரக்கு வாகனங்களுக்காகச் செலுத்தப்பட வேண்டிய வித்தியாச வரி மற்றும் மேல் வரி ஆகியவற்றை தள்ளுபடி செய்வது குறித்து உள் (போக்குவரத்து) துறையின் 29—7—1992 ஆம் நாளிட்ட 1335 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974 25 (2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

39. 1957 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (ஒழுங்குமுறை) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள் (திரைப்படங்கள்) துறையின் 3—8—1992 ஆம் நாளிட்ட 1364 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை.



1993 பிப்ரவரி 5]

[1955 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (ஒழுங்கு முறை)
சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 9/1955) 10 (3) பிரிவின்கீழ்
பேரவை முன் வைக்கப் பெற்றது.]

40. சென்னை, அரசு கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி
மருத்துவ மனையிலுள்ள இந்தியன் கவுன்சில் மருத்துவ ஆராய்ச்சி
மற்றும் மனித இனப் பெருக்கம் ஆராய்ச்சி நிலையத்திற்குச்
சொந்தமான மோட்டார் வண்டியை அன்பளிப்பாகவும்,
வாடகைக்கு அளிக்காமலும் கல்வி நோக்கங்களுக்காக பயன்படுத்
தும் வரை அந்நிலையத்தினால் செலுத்தப்பட வேண்டிய வரியை
நான்கில் ஒரு பங்காக குறைப்பது குறித்து உள் (போ.) துறை
யின் 8—10—1991 ஆம் நாளிட்ட 1504 ஆம் எண் அரசாணை
யில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1974 ஆம் ஆண்டு தமிழ்
நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம்
13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

41. இந்திய அரசின் இராணுவத் துறைக்கு சொந்தமான எல்லா
மோட்டார் வாகனங்களுக்கும் வரி செலுத்துவதிலிருந்து விலக்க
ளிப்பது குறித்து உள் (போக்குவரத்து) துறையின் 23-10-1991
ஆம் நாளிட்ட 1583 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட
அறிவிக்கை. [1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி
விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2)
பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

42. 15—10—1980 ஆம் நாளிட்ட 11 (2)/எஜி.4554/80,
எண் கொண்ட வேளாண்மைத் துறையின் அறிவிக்கையில்
திருத்தமொன்று செய்வது குறித்து 21—4—1992 ஆம் நாளிட்ட
221 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை.
[1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் அங்காடி
கள் (ஒழுங்குமுறை) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1989)
52 (4) (சி) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

43. 30—6—1975 ஆம் நாளிட்ட 11 (2)/2571/75 ஆம்
எண் கொண்ட வேளாண்மைத் துறையின் அறிவிக்கையில் திருத்த
மொன்று செய்வது குறித்து வேளாண்மைத் துறையின் 20-5-1992
ஆம் நாளிட்ட 301 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட
அறிவிக்கை. [1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்
விளைபொருள் அங்காடிகள் (ஒழுங்குமுறை) சட்டத்தின்
[தமிழ்நாடு சட்டம் 27/1989) 52 (4) (சி) பிரிவின் கீழ்
பேரவை முன் வைக்கப் பெற்றது.]

44. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி
விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து 24—2—1992
ஆம் நாளிட்ட 81 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட
அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை
வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்
கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

45. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி
விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து 10—6—1992 ஆம்
நாளிட்ட 214 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட

அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

46. சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் நீரகற்று வாரியத்தின் சில அதிகாரிகளை எஸ்டேட் அதிகாரி களாக நியமனம் செய்வது குறிந்து வருவாய்த் துறையின் 28—4—1992 ஆம் நாளிட்ட 494 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1976 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது இடங்கள் [அங்கீகரிக்கப்படாத குடியிருப்புகளை அகற்று தல்) சட்டத்தின் கீழ் (தமிழ்நாடு சட்டம் 1/1976) 20 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

47. 1978 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நிலம் (உச்ச வரம்பு மற்றும் ஒழுங்குமுறை) விதிகளில் சில திருத்தங்கள் செய் வது குறித்து வருவாய்த் துறையின் 19—8—1991 ஆம் நாளிட்ட 1136 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1978 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நிலச் (உச்சவரம்பு மற்றும் ஒழுங்குமுறை) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/1978) 47 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

48. 12—3—1980 ஆம் நாளிட்ட 11 (2)/வருவாய்/1979/80 ஆம் எண் கொண்ட வருவாய்த் துறையின் அறிவிக்கையில் திருத்தமொன்று செய்வது குறித்து வருவாய்த் துறையின் 20—1—1990 ஆம் நாளிட்ட 28630/பி2/87 ஆம் எண் அரசு கடிதத்தில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1976 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது இடங்கள் (அங்கீகரிக்கப்படாத குடியிருப்பு களை அகற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1976) 20 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

49. 1954 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர் வாணைய குழு ஒழுங்குமுறை விதிகளில் திருத்தமொன்று செய் வது குறித்து 5—8—1992 ஆம் நாளிட்ட 265 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [இந்திய அரச மைப்புச் சட்டத்தில் 320 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

50. 1992-93 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்ட வரி விகிதங்களில் மாறுதல் மற்றும் விலக்களித் தல் குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 6—3—1992 ஆம் நாளிட்ட 111 ஆம் எண் அரசாணை யில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ் நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

51. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து, 10—4—1991 ஆம் நாளிட்ட 138 ஆம் எண அரசாணையில் வெளியிடப்பட்ட





அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

52. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 6—7—1992 ஆம் நாளிட்ட 252 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

53. தொழிற்சாலைகளுக்கு விற்பனை வரியை தள்ளி வைத்தல், தள்ளுபடி செய்தல் மற்றும் விற்பனை வரியில்லா திட்டத்தை அமுல் செய்வது குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 10—9—1991 ஆம் நாளிட்ட 396 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் தமிழ் நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

54. 1938 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கை வரி விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 4—9—1992 ஆம் நாளிட்ட 326 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1939 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1939) 16 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

55. 1954 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர் வாணையம் குழு (ஒழுங்குமுறை) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத் துறையின் 4—3—1992 ஆம் நாளிட்ட 76 ஆம் எண் அரசாணை யில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

56. 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுபான (சில்லறை விற்பனை) விதிகளில் திருத்தங்கள் மற்றும் சில்லறை வியாபாரி கள் கணக்குகள் பராமரிப்பது குறித்து உள், மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறையின் 20—2—1991 ஆம் நாளிட்ட 50 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

57. இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு சாராவிகள் சில்லறை விற்பனை கடைகளை, காலை 8 மணி முதல் இரவு 11 மணி வரை திறந்து வைத்திருப்பது பற்றி 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுபான (சில்லறை விற்பனை) விதிகளில்

8
164980



திருத்தம் செய்வது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 26—5—1992 ஆம் நாளிட்ட 100 ஆம் எண். அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

58. போக்குவரத்து உரிமம் வழங்குவது பற்றி 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுபான (சில்லறை விற்பனை) விதிகளில் திருத்தம் செய்வது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறையின் 28—5—1991 ஆம் நாளிட்ட 144 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

59. 1978 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நிலம் (உச்ச வரம்பு மற்றும் ஒழுங்குமுறை) விதிகளில் திருத்தமொன்று செய் வது குறித்து வருவாய்த் துறையின் 26—11—1991 ஆம் நாளிட்ட 1485 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1978 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் ஒழுங்குமுறை) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/1978) 47 (3] பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.

## ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

1. சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் பரிந்துரையின் மேல் உள் (திரைப்படங்கள்) துறையின் 11—10—1988 ஆம் நாளிட்ட அறிவிக்கைக்கு பிழை திருத்தமொன்று செய்தமை குறித்து உள் (திரைப்படங்கள்) துறையின் 17—7—1992 ஆம் நாளிட்ட 1276 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை.

2. 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) இரண்டாம் திருத்த அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 12/1992).

3. 1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைப் பொருள் வாணிப (முறைப்படுத்துதல்) திருத்த அவசரச் சட்டம் (தமிழ் நாடு அவசரச் சட்டம் எண் 1/1993).

4. 1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்த அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 2/1993).

5. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஆளுநர் உரை யாற்றும்போது பின்பற்ற வேண்டிய ஒழுங்குமுறை பற்றிய புத்தகம். (தமிழ், ஆங்கிலம்).

6. 1993 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 4 ஆம் நாள் தமிழ் நாடு சட்டமன்றப் பேரவையில் ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரை. (தமிழ், ஆங்கிலம்).

31/N93
N93.31.1

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras 1.
12 New Century Book House (Private) Limited, Madras 2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

### IN MOFFASIL OF TAMIL NADU

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District.
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore District)
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Brothers, Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore 1.
11 S. M. Jegannatham Book House, 35, Nanthi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1
15 Parameswari Book Shop, No. 461, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-14.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore 2.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1.

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalayam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bachi & Company, 286, B.B. Gandhi Street, Calcutta-12.

© Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.